ஸ்ரீ:

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्य तूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 13

...த்ரிகை 11

...ஷச் சந்தா ...பாய் 3.

ஜய ஸு கார்த்திகை மீ

NOVEMBER 1954

தனி ப்ரதி அணா 4.

—: ஸ்ரீ அலர்மேல்மங்கைத் தாயார் :—

595
595 4-54
OFFICE ... 18 NOV 1954 MADRAS
72 N54.13.11 199552

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் — பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 342
2. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் 344
3. பஞ்சாங்கஸங்க்ரஹம் 347
4. திருப்பாவைக்கதை 349
[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம், திருமலைதாதாசார்யஸ்வாமி, M. O. L. திருப்பதி.]
5. ராமாநுஜபதமும் பாரதந்த்ரியமும் 353
[ஸ்ரீ. உப. வித்வான், வேளியநல்லூர், ஸ்ரீநிவாஸதாதாசார்யஸ்வாமி, காஞ்சீபுரம்.]
6. வேதாந்தாசார்யர் 354
[ஸ்ரீ. உப. கோடியாலம், துரைஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி.]
7. கார்த்திகைப் பூராடம் 357
[ஸ்ரீ. உப, பந்தல்குடி, ரே. திருமலை அய்யங்கார் ஸ்வாமி, தமிழ் வித்வான், அம்பத்தூர்.]
8. நற்போதுபோக்கு 360
[ஸ்ரீராமானுஜதாஸன், மதுரை.]
9. வாழ்த்துப்பதிகம் 362
10. ஆசார்யமஹிமை 364
[ஸ்ரீ. உப. வித்வான், சிலுக்கூர், மாடபூஷி, வேங்கடராகவாசார்ய ஸ்வாமி, ஹைதராபாத் ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீகார்யகர்த்தா.]
11. திவ்யப்ரபந்தங்களில் ஒரு பாடல் (
[ஸ்ரீ. உப. N. R. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, அட்வோகேட், மதுரை.]
12. அட்டைப்படவிளக்கம் 367
[ஸ்ரீ. உப. பாதூர், தூப்புல், ராமபத்ராசார்ய ஸ்வாமி, சிரோமணி, ஸ்ரீஅஹோபிலமடம், திருவுள்ளூர்.]
13. விசாகோத்ஸவம் 368
ஸ்ரீ. உப. புரிசை, நடாதூர், க்ருஷ்ணமாசாரிய ஸ்வாமி, சிரோமணி; திருவுள்ளூர்.
14. செய்திகள் 370

குறிப்பு:- அடுத்த ஸஞ்சிகையுடன் இவ்வருஷம் முடிகிறபடியால் சந்தாதாரர்கள் தங்களது சந்தா பாக்கியை அனுப்பிக்கொடுத்து உபகரிப்பதுடன், தங்களது விலாஸமாறுதல்களிருந்தால் அதைத் தெரிவித்தால் புது வருஷம் முதற்கொண்டு எவ்விதமான விளம்பமுமின்றி பத்திரிகை அனுப்ப ஸௌகர்யமாயிருக்கும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 13 } ஜய ௵ கார்த்திகை ௴ { ஸஞ்சிகை 11

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோதிதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योन्तःप्रविश्य ममवाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरण श्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

நம் ஸமூஹத்தில் உள்ள தனிகர்கள் தங்கள் வாழ்நாட்களிலேயே கூடுமானவரையில் ஸமூஹ பொதுநலனுக்காகவும், தர்ம கைங்கர்யங்களுக்காகவும், மதஸம்பந்தமான கார்யங்களுக்காகவும் தங்களுடைய த்ரவ்யங்களை உபயோகித்தல் நலமென்றும், இல்லாவிடில் தங்களால் சேமிக்கப்பட்ட ஏராளமான த்ரவ்யம் தங்களுடைய ஸந்ததியினருக்கென்றே ஒதுக்கப்படாமல் வேறு வழிகளில் செலவு செய்யப்படுமென்பதை ஸமீபகாலத்தில் பல உலகறிந்த பெரியோர்கள் கூறிவருவதை நம்மில் பலர் அறிவோம். தவிர மதஸம்பந்தமான செலவுகள் செய்வதிலும் நாம் ஸங்கோசப்படவோ, தயங்கவோ கூடாது என்றுகூட அப்பெரியோர்கள் கூறியுள்ளார்கள். உலகின், நமது ஸமூஹத்தின் தத்கால நிலையை அறிந்தவர்கள் கூறும் வாக்யங்களில் இதைவிட உண்மை இப்பொழுது காணமுடியாது. பெரியோர்கள் என்று ஓர் ஸமூஹத்தில் கருதப்படுபவர்கள் எவ்வழியில் செல்கிறார்களோ அவ்வழியைத்தான் ஸாமாந்யர்கள் பின்பற்றுவார்கள் என்பது உலகமறிந்த விஷயம். தத்கால நிலையில் ஒவ்வொரு ஸமூஹத்திலும் பெரும்பாலும் ஜனங்கள் 'ऐश्वर्यादनपेतं ईश्वरमयं लोक अर्थतस्सेवते' என்று ஐச்வர்யத்துடன் கூடியவர்களையே (ஸாமாந்ய ஜனங்கள்) பின்பற்றுகிறார்கள். அதுவும் தங்களுக்கு ஏதாவது த்ரவ்யஸௌகர்யம் ஏற்படாதாவென்ற ஆர்வத்தினால்தான். ஆகவே தனவந்தர்களேதான் பெரும்பாலான ஸமூஹத்தினரின் கார்யங்களுக்கும் காரணமாகிறார்கள் என்றுகூடக் கூறலாம்.

உலகத்தில் தத்துவத்தை போதிக்கவும், அறத்தை நிலைநாட்டவும் ஆசார்யச்ரேஷ்டர்கள் அவதரித்து அநுக்ரஹித்து வருகிறார்கள் என்பது உண்மையாயினும் ஜந்மாந்தர ஸுக்ருதவிசேஷத்தினால் ஸமூஹத்திலுள்ள சிலரே ஆசார்யோபதேசங்களை முழுமையையும் கடைபிடிக்கிறார்கள் என்னலாம். பெரும்பாலானவர்களுக்கு ஆசார்யோபதேசங்கள் சிலவைகளோ, அல்லது சிறிது காலங்களுக்கோதான் பயன்படுகின்றன. ஸம்ஸாரஸாகரத்தில் மூழ்கிக்கிடக்கும் இதரர்கள் ஆசார்யர்களுடைய முன்னிலையில் பரமபக்தர்களாக விளங்கவேண்டுமென்று ஸங்கல்பித்துக்கொண்டபோதிலும், தங்களுடைய ஸாதாரண சூழ்நிலையை அடைந்தவுடன் முன் ப்ரதிஜ்ஞைகளைக் கூட மறந்துவிடுகிறார்களென நிச்சயமாகக்கூறலாம். இம்மாதிரியான நிலை ஏன் அவர்களுக்கு ஏற்படுகிறதென்று நாம் ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொருவருடைய சூழ்நிலையும்தான் அவருடைய மாறுதலுக்குக் காரணமென்பது விளங்கும். ஆகவே தகுந்த சூழ்நிலையை ஒவ்வொருவரும் ஏற்படுத்திக் கொண்டால் பரம ஸாத்விகராகவே ஆவரென்பதில் ஐயமில்லை.

நாமாகவே நமது சூழ்நிலையை மாற்றிக் கொள்ளமுடியுமா? ஓரளவு முடியும். முடிந்த அளவில் நமது ஆசாபாசங்களை நாம் விலக்கிக் கொண்டே வந்து நமது அனுவச்ய தேவைகளையும் குறைத்துக்கொண்டே வந்தால் நாம் நமது பழக்க வழக்கங்களையும் மாற்றிக்கொள்ள முடியும். ஆனால் இம்மாதிரி மனோபாவம் ஏற்பட த்ருடமான வைராக்யம் வேண்டும். இது எல்லோருக்கும் எக்காலத்திலும் ஏற்படாது. இது ஸமயத்தில்தான் நமது ஸமூஹத்திலுள்ள தனி

கர்களும், மஹான்களும் தங்களுடைய செய்கைகளினால் தங்களை அண்டியவர்களையும் பொருளாதாரநிலையில் தாழ்ந்தவர்களையும் சீர்படுத்த முடியும். வைதிக நற்பழக்க வழக்கங்களில் தாங்கள் ஈடுபடவாரம்பித்தால் இவர்களைப்பின் பற்றியவர்களும் நற்பழக்கங்களில் ச்ரத்தை கொள்வார்கள். இப் பெரியோர்கள் இதைக் காட்டிலும் பேருபகாரங்களும் செய்யமுடியும். தங்களுடைய ஸாமர்த்தியத்தினாலும், ஊக்கத்தினாலும் ஸம்பாதித்த த்ரவ்யங்களில் ஓரளவை நமது ஸமூஹ நலனுக்கென்றே உபயோகிக்கலாம். ப்ராசீனமான தர்மவ்யவஸ்தைகளுக்கும் ஆத்மீகவளர்ச்சிக்குக்காரணமானவேதங்களைப் பாதுகாக்கலாம். வேதங்களைப் பாதுகாப்பதென்பது வேதாத்யயனம் செய்பவர்களுக்கு ஊக்கமளிப்பது. இதனால் ஸமூஹத்தில் ஸாமர்த்யமுள்ள பலர் இம்மாதிரியான அத்யயன ப்ரவசனங்களில் ஈடுபடுவார்கள். தவிரவும் நமது தேசத்தின் பெருமைக்கு மிகவும் அவச்யமான ஸம்ஸ்க்ருதாப்யாஸத்திற்கு ஊக்கம் அளிக்கலாம். 'கற்றபின் நிற்க அதற்குத்தக' என்றபடி படிப்பது மட்டில் பயனளிக்காது. படிப்புக்குத்தக்க நடத்தை வேண்டும். நன்னடத்தை என்பது ஒரே நாளில் ஏற்படக் கூடியதன்று. பலகாலம் நற்பழக்க வழக்கங்களில் ஈடுபட்டால்தான் நன்னடத்தை ஏற்படும். தகுந்த வயதினில் இம்மாதிரி நிலை ஒருவனுக்கு ஏற்படவேண்டுமென்றால், சிறு வயது முதற்கொண்டே அவன் நல்ல ஸமூஹத்தில் இருத்தல்வேண்டும். ஆகவே நமது ஸமூஹத்திலுள்ள ஒவ்வொரு சிறுவனும் நல்ல பழக்கத்தில் வளர்க்கப்படவேண்டும். இதற்கு நமது பெரியோர்கள் முயற்சிக்க வேண்டும். இம்முயற்சிதான் நமது ஸமூஹ முன்னேற்றத்திற்கு உதவும்.

* * * * * * * *

ஸ்ரீமதஹோபிலமட ஆரம்ப பாடசாலைகள்

ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்ய நியமனத்தின் பேரில் சென்ற விஜய வாண்டு மதுராந்தகம், மாம்பலம், பாதூர் என்ற மூன்று விடங்களிலும் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப பாடசாலை இவ்வாண்டு ஐயத்துடன் மேல் வகுப்புப் பாடங்களுடன் ஆரம்பமாகின. ஜயவாண்டுக் கென்று ஸ்ரீரங்கம், காஞ்சீபுரம், திருக்குடந்தை, வடுவூர், உத்திரன்மேரூர் என்ற ஐந்து புது விடங்களில் பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்டன. எல்லாவிடங்களிலும் வகுப்பொன்றுக்கும் தனித்தனி ஆசிரியர்களுடன் பாடசாலைகள் ஆரம்பமாகின. பெற்றோர்களின் ஒத்துழைப்பினால் பாடங்கள் செவ்வனே நடந்துவந்து மூன்றுவது மாதப் பரீக்ஷைகளும் நடந்தேறின. நவராத்ரிவிராமத்திற்குப் பின் பாடசாலைகள் உபக்ரமிக்கப்பட்டு பாடங்கள் க்ரமமாக போதிக்கப்பட்டு வருகின்றன. ஏராளமான த்ரவ்யசெலவில் பள்ளிக்கூட இடங்கள் வாங்கியும், கட்டிடம்கட்டியும், வாடகைகொடுத்தும், பெஞ்சுகள் புஸ்தகங்கள் போன்ற ஸாதனங்களை சேகரித்தும் பாடசாலைகள் நடத்தப் பட்டு வருகின்றன. பிள்ளைகளுக்கு கல்விப் பயிற்சியில் நல்ல தேர்வு ஏற்படவே ஒவ்வொரு வாரமுடிவிலும் சில பாடங்களில் பரீக்ஷைகள் நடத்தியும் வருகிறது. ஆசிரியர்கள் தங்கள் தங்கள் கார்யங்களை நன்றாக கவனித்துவருவார்களையால் நமது ஸமூஹத்திலுள்ள சிறுவர்கள் அதிவிரைவில் முன்னேற்ற மடைவர்கள் என்று நம்புகிறோம். ஆசிரியர்களுக்கு உத்ஸாஹம் கொடுக்கும் வகையில் பெற்றோர்களுடைய ஒத்துழைப்பும் அவச்யம்.

நமது பள்ளிக்கூடங்களில் கல்வி போதனையுடன்கூட மாணவர்களுக்கு நன்னடத்தையும் கற்பிக்கப்பட்டுவருகிறது. ஒன்றிரண்டு நூற்றாண்டுகளாக பேனுட்டாரின் ஆதிபத்யத்தினால் நமது நாட்டில் நமது வைதிக ஸமூஹத்திலுங்கூட பலவித துராசாரங்கள் புகுந்துகொண்டிருக்கின்றன. நமக்கு அவச்யம்போல் தோன்றுமவைகள், அறவே விலக்கத்தக்கன. அதை நமது ஸமூஹத்தினர்கள் — ஏன் ஆஸ்திகர்கள் கூட உணருவதில் தாமதம் ஏற்படுகிறது. இப்படி நாமெல்லோரும் விலக்கத்தகுந்த துராசாரங்களை தூரவிலக்குவதில் நாம் தயங்கவே கூடாது. இதுவிஷயமாய் நமது பாடசாலையில் எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிகளையெல்லாம் நமது ஸுஹ்ருத்துக்கள் நன்குணர்ந்து ஒத்துழைத்தால் அதிவிரைவில் நமது ஸமூஹம் நல்வழியில் முன்னேற்றமடையுமென்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

11-10-54வரை காரைக்குடி கிருஷ்ணன் கோயிலில் 4 நாள் எழுந்தருளியிருந்தார். அவ்வூர் வாஸிகள் ஆராதித்தார்கள். அன்று ராத்ரி அங்கிருந்து லக்ஷ்மீபுரம் அக்ரஹாரத்திற்கு எழுந்தருளினர். நரஸிம்ஹ அய்யங்கார் தன்னுடைய க்ருஹத்தில் ஸ்ரீ அழகியசிங்கரை எழுந்தருளப் பண்ணி பெரியபெருமாளுக்குத் திருமஞ்சனமும் கண்ணனுக்கு டோலோத்ஸவமும் பண்ணிவைத்து ஆராதித்தார். அன்றிரவு முத்துப்பட்டிண அக்ரஹாரத்திற்கு எழுந்தருளினர். 13-10 54 அன்று அவ்வக்ரஹாரவாஸிகள் ஆராதித்து கண்ணனுக்கு டோலோத்ஸவம் பண்ணி வைத்தார்கள். அன்று ராத்ரி 10 மணிக்குப் புறப்பட்டு 14 மைலுள்ள கண்டரமாணிக்கத்திற்கு எழுந்தருளி, அங்கிருந்து 14-10-54 ராத்ரி 9 மணிக்குப் புறப்பட்டு 12 மைலுள்ள திருக்கோட்டியூர் அஹோபிலமடத்திற்கெழுந்தருளினர். 15-10-54 காலை அபிகமநாராதனம் நடந்ததும் கோயில் பரிஜனங்களும் ஊர் பிரமுகர்களும் தம்முடைய திருவுள்ளத்திற்கேற்ப செய்து கோயிலுக்கு எழுந்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்ததைத் திருவுள்ளப்பற்றி ஸகல பிருதுகளுடன் ஸ்ரீ ஸௌம்யநாராயணன் ஸந்நிதிக்கு எழுந்தருளியாயிற்று. த்வஜஸ்தம்பத்திற்கருகாமையில் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளும்போது ஸ்ரீ ஶடாரியை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து எதிர்கொண்டு வரவேற்றனர். மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு ஸௌம்யநாராயணன் ஸந்நிதிக்குள் எழுந்தருளி மங்களாஶாஸனம் செய்தாயிற்று. பிறகு விமானத்திற்கெழுந்தருளி நின்ற நாராயணன் பரமபதநாதன் ஸந்நிதிகளையும் மங்களாஶாஸனம் செய்தருளி ஸகல மரியாதைகளையும் பெற்றுக்கொண்டு அஹோபிலமடத்திற்கெழுந்தருளியாயிற்று. அவ்வூர் மடத்தில் செய்யவேண்டிய ரிபேர்களை நேரில் கடாக்ஷித்து சீககிரத்திலேயே தகுந்த ஏற்பாடுகள் செய்வதாக ஸாதித்தாயிற்று. அன்று ராத்ரி ஸ்ரீ. உப. என். ஜி. கிருஷ்ண அய்யங்கார், அவர் ஸஹோதரர்களுடைய ப்ரார்த்தனையின் பேரில் 9 மைல் தூரமுள்ள நெடுமரத்திற்கு எழுந்தருளினர். அந்த ஸ்வாமி 16-10-54 அன்று தன்னுடைய க்ருஹத்தில் எழுந்தருளப்பண்ணி மண்டபத்திலுள்ள எல்லா மூர்த்திகளுக்குத் திருமஞ்சனமும், ராத்ரி கண்ணனுக்கு டோலோத்ஸவமும் பண்ணிவைத்து, அன்றும் மறுநாள் பகலும் ஆராதித்தார். 17-10-54 மாலை 3 மணிக்குப் புறப்பட்டு 12 மைலிலுள்ள திருபய்யம் ஸ்ரீ தேசிகன் ஸந்நிதிக்கெழுந்தருளினர். இந்த தேசிகன் ஸந்நிதியையும் கோஷ்டிபுரம் போல் ஸ்ரீபதாதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனை ப்ரதிஷ்டை பண்ணி அஹோபிலமடமாக ஆக்கிக்கொள்ளவேண்டுமென்று ப்ரார்த்தித்தார்கள். சீக்கிரத்திலேயே செய்வதாக ஸாதித்தாயிற்று. 18-10-54 காலை அபிகமநாராதனம் முடிந்ததும் அவ்வூர் ஸத்யகிரிநாதன் ஸந்நிதிக்குக் கோயில் பரிஜனங்கள் தன் திருவுள்ளத்திற்கு உகப்பாக நடந்துகொண்டு எழுந்தருளும்படி ப்ரார்த்தித்ததைத் திருவுள்ளம் பற்றி ஸகலபிருதுகளுடன் கோயிலுக்கு எழுந்தருளியாயிற்று. த்வஜஸ்தம்பத்திற்கருகில் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளும்போது ஸ்ரீ ஶடாரியை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து ஸகலமரியாதைகளுடன் எதிர்கொண்டு வரவேற்றனர். ஸ்ரீ அழகியசிங்கரும் ஸ்ரீஸத்யகிரிநாதனை மங்களாஶாஸநம் செய்தருளி,

பிறகு கர்ப்பக்ருஹத்தில் ஸகலதேவதைகளுடன் ஒரே மூர்த்தியாக சயனத்திருக்கோலத்துடன் வெகு ஆச்சர்யமாக ஸேவை ஸாதிக்கும் மெய்யமலையானை மங்களாசாஸநம் செய்தருளி, அப்படியே தாயார் ஸந்நிதி முதலிய ஸந்நிதிகளை மங்களாசாஸநம் செய்தருளி ஸகல மரியாதைகளையும் பெற்றுக் கொண்டு ஸ்ரீதேசிகன் ஸந்நிதிக்கு எழுந்தருளியாயிற்று. அன்று ராத்ரி 13 மைலிலுள்ள புதுக்கோட்டைக்கு எழுந்தருளினர். அவ்வூர் வாஸிகள் பூர்ணகும்பத்துடன் எதிர்கொண்டுவரவேற்று வரதராஜப்பெருமாள் ஸந்நிதியில் எழுந்தருளப்பண்ணினர்கள். 19-10-54 ல் ஸமஸ்தானத்தார் ஆராதித்தனர். அன்றிரவு அவ்வூர் வாஸிகளின் ப்ரார்த்தனைக்கிணங்க ப்ராஹ்மண ஆசாரம் என்பது பற்றி உபன்யஸித்தாயிற்று. 20-10-54 அன்று அவ்வூர் வாஸிகள் ஆராதித்து ராத்ரி கண்ணனுக்கு டோலோத்ஸவம் பண்ணி வைத்தார்கள். 20-10-54 ல் புதுக்கோட்டையிலிருந்து மணப்பாறை மார்க்கமாய் குழித்தலைக்கு எழுந்தருளுவதாகமுன்பு தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் பிறகு தங்கும் வஸதிகள் ஸௌகர்யமாக இல்லாதபடியால் அதை மாற்றித் திருச்சினாப்பள்ளி வழியாக எழுந்தருளுவதாகத் திருவுள்ளம்பற்றியாயிற்று. 20-10-54 ராத்ரி புறப்பட்டு 14 மைலிலுள்ள அம்மாசத்திரத்திற்கெழுந்தருளியாயிற்று. அக்ரஹாரத்தில் ஸ்ரீ. க்ருஷ்ணமாசாரியர் யதாசக்தி ஆராதித்தார். அன்றிரவு அவ்விடத்திற்கு ஸ்ரீரங்கத்திலிருந்து ஸ்ரீ. எம். பி. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீ. நரஸிம்ஹ அய்யங்கார் முதலியவர்கள்வந்து ஸ்ரீரங்கத்திற்கெழுந்தருளி அவ்விடமே ஸ்ரீ 41-வது பட்டம் அழகியசிங்கரது திருவாராதனத்தையும் டத்தவேண்டுமென்று ப்ரார்த்தித்தனர். ஸ்ரீ அழகியசிங்கரும் 40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் அவதார ஸமாப்தியான துவரிமானுக்கு எழுந்தருளின பிறகு 41-வது பட்டம் அழகியசிங்கர் அவதாரஸமாப்தியான ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளுவதும், ஸ்ரீ அழகியசிங்கரின் வர்ஷாராதனம் வருகிறபடியாலும் இதுவும் ஒரு விசேஷமே என்று ஸாதித்தாயிற்று. 21-10-54 இரவு புறப்பட்டு தொண்டாநெல்லூர் சத்திரத்திற்கெழுந்தருளியாயிற்று. அவ்விடத்தில் 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரது ஆராதனத்தை உத்தேசித்து க்ரந்தசதுஷ்டய வேத திவ்யப்ரபந்தபாராயணங்கள் உபக்ரமிக்கப்பட்டன.

அவ்விடம் திருச்சி அட்வொகேட், ஸ்ரீ, ஏ. வி. கோபாலாசார்யர் ஸ்வாமி தன் குமாரருடன் வந்து தம்முடைய க்ருஹத்திற்கு பெருமாள் எழுந்தருளவேண்டுமென்றும், அங்கிருந்து ஸ்ரீரங்கமெழுந்தருள வேணுமென்றும் ப்ரார்த்தித்தார். அவர் ப்ரார்த்தனையின் பேரில் ராத்ரி புறப்பட்டு அவரது ‚கோகுலம்' என்ற பங்களாவிற்கு எழுந்தருளியாயிற்று. த்வாதசியன்று அந்த ஸ்வாமி ஆராதித்தார். டோலோத்ஸவம் பண்ணிவைத்தார். அவ்விடத்திற்கு ஸ்ரீரங்கத்திலிருந்து சில ப்ரமுகர்கள் வந்து ஸ்ரீரங்கத்திற்கெழுந்தருளவேண்டும் என்று மறுபடியும் ப்ரார்த்தித்னர். 23-10-54 அன்று புறப்பட்டு அங்கிருந்து 7 மைலிலுள்ள ஸ்ரீரங்கம் தசாவதார ஸந்நிதிக்கு எழுந்தருளியாயிற்று. தெற்கு வாசலில் எழுந்தருளும்போது பூர்ணகும்பத்துடன் வரவேற்று ஸ்வஸ்திவாசனத்துடன் ஊர்வலமாகஎழுந்தருளப்பண்ணினர்கள். 24-10-54ல் 41-வதுபட்டம் ஸ்ரீ அழகியகிங்கர் எழுந்தருளியிருந்த ஆஸ்ரமத்தை வருகிற ஆராதனத்துக்குள் கட்டிமுடித்து ஆராதனத்தை ஆஸ்ரமத்திலேயே நடத்தவேண்டும்; அப்படியே 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஆஸ்ரமத்தையும் கட்டிமுடிக்கவேண்டும் என்று திருவுள்ளம் பற்றியாயிற்று. அன்று காலை 41-வது பட்டம் அழகியசிங்கரை எழுந்தருளப்பண்ணி மங்களாசாஸனம் பண்ணிவைத்து அங்கேயே எழுந்தருளப்பண்ணி சாற்றுமுறைகோஷ்டி நடந்தது. அன்று ஸ்ரீ. செம்போடை நாராயண அய்யங்கார் ஆராதித்தார். 25-10-54 தீபாவளியன்று பெரிய திருமஞ்சனமும் பண்ணிவைத்தார்கள். 26-10-54 ந்தேதி மத்யானம் மேலஉத்திரவீதி ஜயம்மாள் தன்னுடைய க்ருஹத்திற்கு பெருமாள் எழுந்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்தபடி அவ்விடத்திற் கெழுந்தருளியாயிற்று. ராத்ரி ஆராதனம் நடந்து ஸேவை பாராயணம் சாத்துமுறையாகி கோஷ்டியான

பின்பு மாஜி ஜில்லா ஜட்ஜ் ஸ்ரீ. ராகவய்யங்கார் ப்ரார்த்தனையின்பேரில் அம்மாமண்டபத்தில் உள்ள அவரது க்ருஹத்திற்கு எழுந்தருளியாயிற்று. 27-10-54 அன்று ஸ்வாதி திருமஞ்சனமும் பண்ணிவைத்து ஆராதித்தார். அன்றிரவு புறப்பட்டு ரிடையர்ட் இஞ்சினீயர், ஸ்ரீ. எம். பி. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்காரது ப்ரார்த்தனையின் பேரில் மேல் அடையவளஞ்சானில் உள்ள அவருடைய க்ருஹத்திற்கு எழுந்தருளியாயிற்று. 28-10-54 அன்று அந்த ஸ்வாமி ஆராதித்தார். அன்றிரவு புறப்பட்டு மறுபடியும் தசாவதாரன் ஸந்நிதிக்கெழுந்தருளினர். 30-10-54 அன்று ஆஸ்தான வித்வான் ஸ்ரீ. உப. வே. புத்தங்கோட்டகம் ஸ்வாமி காலையில் பெரிய திருமஞ்சனம் பண்ணி வைத்தார். அன்று ஸாயங்காலம் தமது க்ருஹத்திற்கு பெருமாள் எழுந்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்தார். அன்று மத்தியானம் புறப்பட்டு அந்த ஸ்வாமியின் க்ருஹத்திற்கு எழுந்தருளினர். அந்த ஸ்வாமி ராத்ரி ஆராதனத்தை நடத்திவைத்தார். ஸேவை பாராயணம் சாத்துமுறையாகி கோஷ்டியான பிறகு அவ்விடமிருந்து தசாவதாரன் ஸந்நிதிக்கு எழுந்தருளியாயிற்று. மறுநாள் 31-10-54 அன்று 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரது வர்ஷாராதனத்தை முன்னிட்டு சென்னை முதலான விடங்களிலிருந்து அநேக சிஷ்யகோடிகள் வந்திருந்தனர். யதாகாலத்தில் ஸேவை, பாராயணம், சாத்துமுற; ஸம்பாவனைகள் நடந்தன. தசாவதாரன் ஸந்நிதியில் பெருமாள் எழுந்தருளியிருக்கும் காலங்களில் 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரை ப்ருந்தாவனத்திலிருந்து கோஷ்டியில் எழுந்தருளப்பண்ணி, ஸேவை சாத்துமுறையாகி மரியாதைகள் நடந்தது. கோஷ்டியானதும் ஸ்ரீமதழகியசிங்கருக்கு விசேஷ மரியாதை செய்விக்கப்பட்டு தசாவதாரன் ஸந்நிதி மங்களாசாஸனம் நடந்தன. திருப்பவும் ஸந்நிதியிலும் மங்களாசாஸனம் நடந்து தேசிகன் ஸந்நிதியிலும் மங்களாஶாஸனம் செய்து கோயில் ப்ரதக்ஷிணமாக ப்ருந்தாவனத்தில் எழுந்தருளப்பண்ணி அவ்விடம் கோஷ்டி நடந்தது. பின்பு ஸ்ரீ அழகியசிங்கருக்கு மரியாதையானதும் நியமனம் பெற்றுக்கொண்டு ஆஶ்ரமத்திற் கெழுந்தருளியாயிற்று.

ஸமீபகாலத்தில் மிக அஶக்தியாயெழுந்தருளியிருந்த ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி தில்லைஸ்தானம் ஸ்வாமிஸந்நிதிக்கு ஸ்ரீ அழகியசிங்கர், 'ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் தேவரிருப்பிடத்திற்கு எழுந்தருளி ஸேவை ஸாதிப்பர்' என்பதாகச் சொல்லியனுப்பியபடி பெருமாள் தசாவதாரன் ஸந்நிதிக்கு எழுந்தருளியிருந்ததால் அந்த ஸ்வாமியும், தனக்கு ஸௌகர்யப்பட்ட காலங்களில் எழுந்தருளி பெருமாளை ஸேவித்தார். வர்ஷாராதனத்தன்று சாத்துமுறையாகி கோஷ்டி முடியும்வரை எழுந்தருயிருந்தார். ஸ்ரீ ஸந்நிதியில் ஏகாந்தத்தில் வார்த்தை சொல்லிக்கொண்டு இருந்தகாலங்களில் தம்முடைய கடைசிகாலம் வரையில் இவ்விடத்திலேயே இருக்கவேண்டுமென்கிற தம்முடைய மனோரதத்தை வெளியிட்டருளி, எம்பெருமானும் அவ்விதம் ஸங்கல்பிக்கவேணுமென்று ஸாதித்தாயிற்று.

ஸ்ரீ. வாங்கல், ராஜகோபால அய்யங்காரது ப்ரார்த்தனையின் பேரில் அன்றிரவு கிளம்பி மேல் அடையவளஞ்சான் வீதியிலுள்ள அவருடைய க்ருஹத்திற் கெழுந்தருளியாயிற்று. 1-11-54 ல் பெரிய திருமஞ்சனம் பண்ணிவைத்து அவர்கள் ஸமாஶ்ரயணம் பண்ணிக்கொண்டு பெருமாளை அன்று ஆராதித்து ராத்ரி டோலோத்ஸவம் பண்ணிவைத்தார். அன்றிரவு புறப்பட்டு தசாவதாரன் ஸந்நிதிக்கெழுந்தருளியாயிற்று. 2-11-54 ல் உறையூர் ஸௌராஷ்ட்ர தாத்தா பெருமாளை ஆராதித்தார். 3-11-54 அன்று ஸ்ரீ. புலியூர் ஸ்ரீநிவாஸாசாரியர் முதலானவர்களது ப்ரார்த்தனையின்பேரில் ராத்ரி கிளம்பி வடக்கு அடையவளஞ்சான் வீதியிலுள்ள அவரது க்ருஹத்திற்கு எழுந்தருளினர். அவரும் அவரது ப்ராதாவும் பெருமாளை ஆராதித்து ராத்திரி டோலோத்ஸவம் பண்ணிவைத்தார்கள். பெருமாள் தசாவதாரன் ஸந்நிதியை விட்டுப் புறப்பட்டவன்று (புதன்கிழமை) ஸாயங்காலம் ஸ்ரீரங்கம் பெரிய ஆஶ்ரமம் தெம்பரை ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளி பெருமாளை

ஸேவித்தருளினர். தான் பூர்வாச்ரமத்தில் மன்னார்குடி ஸ்ரீ அழகியசிங்கரிடம் வ்யாகரண ஶாஸ்த்ரம் வாசித்ததாகவும், மன்னார்குடிஅழகியசிங்கர் மன்னார்குடியில் எழுந்தருளியிருக்கும் காலங்களில் தினந்தோறும் பெருமாளின் ஸேவை தனக்குக் கிடைக்குமென்றும் இப்பொழுது தன்னுடைய அசக்தியில் பெருமாள் ஸேவை பகவத்க்ருபையால் கிடைத்ததென்றும் ஸந்தோஷத்துடன் ஸ்ரீ அழகியசிங்கரிடம் வெளியிட்டருளினார். 4-11-54 ராத்ரி திருப்பளாத்துறைக்கு எழுந்தருளுவதாக நிச்சயிக்கப்பட்டிருந்தபோதிலும் கொண்டையம்பேட்டை அக்ரஹாரவாஸிகளின் ப்ரார்த்தனைப்படி மறுநாள் புறப்படுவதாகத் தீர்மானித்து, அன்று உத்திரவீதியிலுள்ள ஸ்ரீ அஹோபிலமடத்திற் கெழுந்தருளினர். அங்கு நித்யப்படி சாத்துமுறையின் போது அங்கு எழுந்தருளியிருக்கும் 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கருக்கு மரியாதை செய்விக்கப்பட்டது. அன்று ராத்ரி ஆராதனத்தை மக்ரீராம்ஸேட் தன்னுடையதாக நடத்தி வைத்தார். அன்று ராத்ரி (5-11-54) திருப்பளாத்துறைக்கு எழுந்தருளும்போது இரவு 9 மணிக்குத் தெற்கு அடையவளஞ்சானிலுள்ள ஸேட் சத்திரத்திற்கு எழுந்தருளி, ஸம்பாவனையாகி கல்கண்டு விநியோகமானதும், அங்கிருந்து12மைலுள்ள திருப்பளாத்துறைக்கெழுந்தருளிடாயிற்று. அங்கு ஸ்ரீ. அய்யாஸாமி அய்யங்கார் 8-11-54 வரை மூன்றுநாட்கள் பெருமாளை ஆராதித்தார். அங்கிருந்து 8 மைலுள்ள மருதூருக்கு எழுந்தருளியாயிற்று. ஸ்ரீ. கே. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் பூர்ண கும்பத்துடன் வரவேற்று, தமது க்ருஹத்தில் எழுந்தருளப்பண்ணி, பெருமாளுக்குத் திருமஞ்சனம் பண்ணிவைத்து ஆராதித்தார்.

(தொடரும்)

—*—*—

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

ஜய ஹூ கார்த்திகை – மார்கழி மீ 1954 ஹூ நவம்பர் – டிஸம்பர் மீ

[தக்ஷிணாயநம்; சரத் ருது; விருச்சிக மீ]

16-11-54	கார்த்திகை 1வ	செவ்வாய்க்கிழமை	விருச்சிகரவி 17-10 விஷ்ணுபதி, ஸங்க்ரமண தர்ப்பணம், விருச்சிக க்ருஷ்ண ஸப்தமிதிதி.
21-11-54	6வ	ஞாயிற்றுக்கிழமை	ஏகாதசி வ்ரதம். த்வாதசி திதி.
22-11-54	7வ	திங்கட்கிழமை	த்ரயோதசி திதி.
23-11-54	8வ	செவ்வாய்க்கிழமை	அதிதி.
25-11-54	10வ	வியாழக்கிழமை	● அமாவாஸ்யை.
29-11-54	14வ	திங்கட்கிழமை	பூராடம், 43-வதுபட்டம் ஸ்ரீ வீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
30-11-54	15வ	செவ்வாய்க்கிழமை	உத்திராடம், 34-வது பட்டம் ஸ்ரீ சடகோப ராமனுஜயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.

6-12-54	21உ	திங்கட்கிழமை	ஏகாதசி. (கைசிக ஏகாதசி)
7-12-54	22உ	செவ்வாய்க்கிழமை	த்வாதசி – த்ரயோதசி திதித்வயம்.
8-12-54	23உ	புதன் கிழமை	சதுர்தசி திதி, க்ருத்திகை, திருமங்கையாழ்வார் – நம்பிள்ளை திருநக்ஷத்ரம்.
9-12-54	24உ	வியாழக்கிழமை	○பூர்ணிமை, ரோஹிணி, திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம், வைகாநஸ தீபம்.
10-12-54	25உ	வெள்ளிக்கிழமை	ஸ்ரீபாஞ்சராத்ரதீபம்,(திருக்கார்த்திகை)
15-12-54	*30உ	புதன்கிழமை	வ்ருச்சிக-சாப க்ருஷ்ண ஷஷ்டி திதி. சாபரவி 47-34.

[ஹேமந்த ருது; சாப மீ]

16-12-54	மார்கழி மீ 1உ	வியாழக்கிழமை	ஷடசீதி, ஸங்க்ரமண தர்ப்பணம், சாப க்ருஷ்ண ஸப்தமி திதி, திருப்பள்ளியெழுச்சி.
21-12-54	6உ	செவ்வாய்க்கிழமை	ஏகாதசி வ்ரதம்.
22-12-54	7உ	புதன்கிழமை	விசாகம், 40-வது பட்டம் ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
24-12-54	9உ	வெள்ளிக்கிழமை	●அமாவாஸ்யை, கேட்டை, தொண்டரடிப்பொடியாழ்வார் – பெரியநம்பிகள் திருநக்ஷத்ரம்.
25-12-54	10உ	சனிக்கிழமை	ப்ரதமை திதி.
26-12-54	11உ	ஞாயிற்றுக்கிழமை	அதிதி.
27-12-54	12உ	திங்கட்கிழமை	த்விதியை திதி.
30-12-54	15உ	வியாழக்கிழமை	பஞ்சமி - ஷஷ்டி திதித்வயம்.
31-12-54	16உ	வெள்ளிக்கிழமை	ஸப்தமிதிதி, பூரட்டாதி, 41-வது பட்டம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹசடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.

* குறிப்பு:- ர்ர்சழி மாதத்தில் க்ருஷ்ண ஷஷ்டி திதி இல்லாமல் போய்விடுவதால், ஷஷ்டி திதியை முன்மாதமாகிய கார்த்திகை 30உ புதன்கிழமையன்றே அநுஷ்டிக்க வேண்டும்.

ஸ்ரீ:

திருப்பாவைக்கதை

(13-வது ஸம்புடம் 9-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

பரீக்ஷித்துப் பார்த்து அவற்றுக்குள் உத்தமோத்தமமென்று தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டில் அங்கே போடப்பட்டது. அதன் கால்கள் யானை தந்தத்தினால் செய்யப்பட்டு வழ வழப்பாகவும் பளபளப்பாகவும் ப்ரகாசித்தன. அதன் மற்றப் பாகங்களும் அப்படியே உத்தமமான மரங்களாலும் தந்தங்களாலும் செய்யப்பட்டு உயர்ந்த வேலைப்பாட்டுடன் விளங்கின. அக்கட்டிலில் பல விரிப்புகள் விரித்து அவற்றின்மேல் அழகு குளிர்த்தி மென்மை மணம் வெண்மை என்கிற ஐந்து குணங்களை யுடையதாய் இக்காரணத்தினாலும், நன்றாகக் கடைந்தெடுத்துப் பரிசுத்தமான பஞ்சினால் செய்யப்பட்டதென்கிற காரணத்தினாலும் பஞ்சசயனமென்று கூறப்பட்ட மெத்து மெத்தென்றிருந்த உயர்ந்த மெத்தை (படுக்கை) போடப்பட்டிருந்தது. தலைக்கும் கைகால்களுக்கும் தனித்தனியே விசித்ரத்தலையணைகள் போடப்பட்டிருந்தன வென்பது முதலியது சொல்லாமலே விளங்கும். மெத்தையின்மேல்கூட எங்கும் வெளிச்சம் படும்படி அவ்வளவு உயரமான ரத்தினக்குத்துவிளக்கு வைக்கப்பட்டிருந்தது. அஸ்தமயம் ஆனவுடன் வேலைக்காரிகள் வந்து விளக்கை ஏற்றிப் பிறகு க்ரமமாக பழவகைகள் பக்ஷியங்கள் குழம்புப்பால் வெற்றிலை வாஸனைப் பாக்கு முதலியவற்றைக் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனார்கள். ஒன்று தவறாமல் எல்லா ஏற்பாடுகளும் செவ்வனே நடந்திருக்கின்றனவா என்று யசோதை பார்த்துவிட்டுப் போனாள். பிறகுக்கண்வளர எழுந்தருளலாமென்று விண்ணப்பம் செய்யப்பெற்ற ஸ்ரீக்ருஷ்ணன் வெகு கம்பீரமாக எழுந்தருளி சயன க்ருஹத்திற்குள் சென்றார். தோழிகள் பிராட்டியை அழைத்து வந்தனர். சயனக்ருஹத்தின் அருகே வந்ததும் அவளுடன் அதிகமாகப் பேச்சுக்கொடாமல் 'ஓகோ, இது செய்யவேண்டுமே? அது செய்யவேண்டுமே. காத்திருப்பார்களே. வெகு சீக்கிரமாகப்போகவேண்டுமே' என்று பலவாறு சொல்லித் தோழிகள் அவளைத் தனியேவிட்டு அகன்றனர். பிறகு மெதுவாக உள்ளே சென்று கதவை நன்றாக மூடித் தாளிட்டு விட்டு லோககாந்தனான காந்தனுடைய நிபுண உபசார வார்த்தை முதலியவற்றால் வெட்கம் தணியப்பெற்ற அவளும் ஸ்ரீக்ருஷ்ணனும் இன்பமயமான ஸல்லாபத்தோடு அங்கு வைக்கப்பட்ட பக்ஷியம் முதலியவற்றை ருசி பார்த்துவிட்டுத் தாம்பூல மருந்தினார்கள். பிறகு எம்பெருமான் பிராட்டியின் முதுகில் ஒரு கையும் கால்களில் ஒரு கையும் கொடுத்து அப்படியே தூக்கி மெத்தையின்மேல் படுக்கவிட்டுத்தானும தன்மேல் ஏறினார். காதலின் மிகுதியால் இரண்டு தேஹங்களும் ஒட்டிக்கொள்ளவாரம்பித்தன. இரண்டும் உருகிக் கரைந்து ஒன்றாகவே ஆகிவிட முடியுமானால் ஆகியிருக்கும். அது ஸாத்யமன்றாகையால் முகத்தோடு முகம், மார்போடு மார்பு, புஜங்களோடு புஜங்கள், கால்களோடு கால்கள் என்று இப்படிச் சிறிதும் இடைவெளி இல்லாமல் நெருங்கி இயைந்தன.

மொக்குகளாகவே தொடுத்தபுஷ்பஹாரங்கள் நிரம்ப வைத்து முடியப்பெற்ற பெருங் கூந்தலின் முடி தளர்ந்து மேல்முகமாகப் படுத்திருந்த பிராட்டியினுடைய சிரஸ்ஸின் ஒரு பக்கத்தில் வெளியே வந்து தலையணைமேல் கிடந்தது. ஒவ்வொரு தொடுப்பிலும் பல மொக்குகள் வைக்கப்பட்டிருந்தன. அவை எல்லாம் அப்போது மலர ஆரம்பித்தன. திருக்கண்களால் ரூபஸௌந்தர்யத்தையும் கர்ணங்களால் வாக்கின் மாதுர்யத்தையும் பிறகு க்ரமமாகத் திருக்கைகளாலும் புஜங்களாலும் திருமார்பினாலும் திருவுருவின் மார்த்தவ மஸ்ருணத்வங்களையும் அநுபவித்து ஆநந்தித்த ஸ்ரீக்ருஷ்ணன் அப்போது கூந்தல், அதில் சூட்டிய மலர்கள், எல்லாவற்றினுடையவும் திவ்ய பரிமளத்தை அநுபவித்து மகிழ்ந்து அந்த க்ரமத்திலே பிம்பாதாரஸத்தையும் உண்டு களித்தார். இவ்விதம் எம்பெருமானுடைய ஐந்து இந்த்ரியங்களுக்கும் வேண்டிய விஷயங்களைக் கொடுத்து அவற்றை உபயோகித்து உண்டான அவனது ஆநந்தத்தைக் கண்டு பிராட்டி தானும் மிகவும் ஆநந்தப்பட்டாள்.

'स्वैश्वरूप्येण सदानुभूतयाप्यपूर्ववद्विस्मयमादधा

நயா' என்றபடி தெவிட்டாதபோகங்கம் இது. ஜ்ஞாநசக்திகள் இராமல்வெறும்தயையினாலும் தயையிராமல் வெறும் ஜ்ஞாநசக்திகளாலும் உலகாக்ஷணம் நடைபெறாது. இந்தக் குணங்கள் முற்றிலும் ஒன்றுக்கொன்று கலத்தல் வேண்டும். அவற்றில் தயை பிராட்டி, ஜ்ஞாநசக்திகள் எம்பெருமான். ஆகவே இவர்களிருவரும் சிறிதும் வேற்றுமையில்லாமல் முற்றிலும் கலந்திருக்கின்றார்கள். உலகத்தில் தம்பதிகளின் சேர்க்கை மற்ற எவருடைய சேர்க்கையும்போலல்லாமல் தனிப்பட்டதொன்று. மனஸ்ஸும் கருத்துமன்றி சரீரமும் இங்கு வேற்றுமை சிறிதுமின்றிக்கலக்கின்றது. உலக தம்பதிகளின் மனம் ரஜஸ் தமஸ் என்கிற குணங்கள் தலையெடுப்பது காரணமாகப் பல மாறுபாடுகளை அடைகின்றதாகையால் ஒரு குறைவுமின்றிப் பரிபூர்ணமாகக் கலப்பது ஸாத்யமாகாமலிருக்கின்றது. திவ்யதம்பதிகளிடத்தில் அவ்விதக் குறைவுக்கு இடமொன்றுமில்லையாகையால் அவர்களுடைய சேர்க்கை ஒரே தத்வமென்னலாம்படி அப்படிப் பரிபூர்ணமாக விருந்தது. இப்படி காடாலிங்கனம் பண்ணிக்கொண்டு சயனித்த திவ்யதம்பதிகள் நித்ராகாலத்தில் எப்படி இருந்திருந்தபோதிலும் அதன்பிறகு விழிப்பு ஏற்பட்டவுடனே அந்தக் காடாலிங்கனத்தைச் சிறிதும் தளரவிடாமலே சயனித்திருந்தனர்:— என்றிப்படி முதல்நாள் அஸ்தமயம் முதல் நடந்திருக்கக்கூடிய ஸர்வவிஷயங்களையும் நினைத்து அந்த நிலையில் அப்போது அந்தத் திவ்ய மிதுனம் இருப்பதாகக் கொண்டாள் நாயகப் பெண். அந்த ஸ்திதியில் அவர்களை எழுப்புவது அநுசிதமென்று சிலருக்குத் தோற்றலாம். ஆனால் தர்மவிரோதமில்லாத காமமே பகவான் உகந்ததாகையாலும் அப்போது விடிந்து மேல் தர்மகார்யம் நடக்கவேண்டியிருப்பதாலும் அதில் குற்றமில்லை யென்று தீர்மானித்து நிச்சங்கமாக நாயகப்பெண் எழுப்பினாள். பிராட்டி எம்பெருமானுடைய நியமனம் பெற்றே எழுந்திருக்கக்கூடுமாதலால் முதலில் எம்பெருமானை அழைத்து, எழுந்திருந்து வந்து கதவைத் திறக்கும்படி பிராட்டிக்கு அநுமதி பண்ணியருளவேண்டுமென்று ப்ரார்த்திக்கக் கருதி கீழ்ச்சொன்ன விஷயங்களை யெல்லாம் குறிப்பாகக் காட்டியும் அப்பொழுது திவ்ய தம்பதிகள் இருக்கும் நிலையை ஸ்பஷ்டமாகச் சொல்லியும் குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டின்மேல் மெத்தென்ற பஞ்சசயனத்தின் மேலேறி கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய் திறவாய் என்றாள். 'ஒவ்வொரு இந்த்ரியமும் ஒவ்வொரு அவயவமும் அதற்குத் தக்க விஷயத்தைப் பெற்றதினால் நீ இன்பக்கடலிலாழ்ந்திருப்பது உண்மையே. ஆகிலும் மேல் கார்யங்கள் நடக்கவேண்டியிருக்கின்றமையால் வாய் திறக்கவேணும். பெயர்ந்து மெத்தையில் சயனித்துப் பிராட்டியை எழும்படி விட்டு, "போய்க்கதவைத்திற, நமது குழந்தைகள் வந்திருக்கின்றன' என்று திருவாய் மலர்ந்தருள வேண்டும்' என்றாள். உடனே பிராட்டியையும் மைத்தடங் கண்ணிணாய் நீயுன் மணாளனின் மாற்றமுணர்ந்து மணிக்கதவம் தாள் திறவாய் என்று ப்ரார்த்தித்தாள். 'எம்பெருமான் உன்னை எழுந்துபோம்படி விட்டாலும் மைதீட்டி அலங்கரித்து விசாலங்களாயிருக்கிற உனது கண்களால் அவனையே பார்த்துக்கொண்டிருக்கத் தோன்றுமேயன்றி அவனைவிட்டு அகலச் சிறிதும் மனம் வராது. ஆகிலும் நோன்பைக் கருதி அவன் நியமனத்தைப் பெற்று வந்து கதவைத் திற' என்றாள். இப்படி இருவரையும் ப்ரார்த்தித்துவிட்டுச் சில நிமிஷங்கள் காத்திருந்தாள். கதவு திறக்கவில்லை. இப்படி இரண்டு மூன்று தரம் கூப்பிட்டுப் பார்த்துவிட்டு, நாழிசென்றபடியாலும் தனக்கு அவர்களிடத்திலுள்ள சலுகையினாலும் சிறிது கோபம் கொண்டவள் போல் ஆகிச் சிறிது அதட்டும் ரீதியிலே பேசினாள்— கோத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய் திறவாய் (காண்) மைத்தடங் கண்ணினாய் நீயுன் மணாளனை எத்தனை போதும் துயிலெழவொட்டாய் காண் என்று. 'என்ன க்ருஷ்ணா உனது ஆநந்தாநுபவத்தையே ப்ரதானமாகக் கொண்டு பிராட்டியை 'எழுந்து போ' என்று சொல்லவே மாட்டாய் போலிருக்கின்றதே'. 'என்ன நப்பின்னைப்பிராட்டி, உன் அழகிலே ஈடுபட்டுப் பரவசனாயிருக்கும் ஸ்ரீக்ருஷ்ணனை அசைய விட மாட்டாய் போலிருக்கின்றதே' என்றாள். தாங்கள் எழுப்பியதைக் கேட்டும் க்ருஷ்ணன் பிராட்டியை எழவிடவில்லையென்றும், பிராட்டி க்ருஷ்ணனை எழவிடாமல் கட்டிக்கொண்டேயிருக்கிறாளென்றும் வைத்து இப்படிப் பேசினாள். 'என் காந்தையோடு

நான் என் இஷ்டப்படி இருக்கின்றேன்; நீ ஏன் வந்து உபத்ரவிக்கவேண்டும்? என்று க்ருஷ்ணனும், 'என் காந்தனோடு நான் என் இஷ்டப்படி இருக்கின்றேன்' என்று பிராட்டியும் நினைக்கக்கூடும். ஆகையால் அதன்மேல் இருவரிடத்திலும் தனித்தனியே அந்வயிக்கும்படிப் பொதுவாகப் பேசினாள்— எத்தனையேலும் பிரிவாற்ற கில்லாயால் தத்துவ மன்று தகவு என்று. ஓ க்ருஷ்ணா, நீ ஒரு க்ஷணகாலமும் பிராட்டியை விட்டுப் பிரிந்திருப்பதைப் பொறுக்கமுடியாமல் இருக்கின்றாயாகில் அது தத்துவமன்று, தகவுமன்று. ஓ நப்பின்னைப் பிராட்டியே, நீ ஒரு க்ஷணகாலமும் எம்பெருமானை விட்டுப் பிரிந்திருப்பதைப் பொறுக்க முடியாமல் இருக்கின்றாயாகில் அது தத்துவமன்று, தகவன்று என்றதாயிற்று. தத்துவமாவது முறை, நீதி, தர்மம். ஒன்றை விரும்பி இங்கு வந்தவர்கள் அதைப்பெற்றே தீரவேண்டும். அவர்கள் அதைப் பெறாமல் போவது தத்துவமன்று. யார் எந்தப் பலனை அடைய விரும்புகின்றார்களோ அவர்கள் அதை அடைவதற்கு ஸ்ரீமந்நாராயணனைப்பற்றுவதே உபாயம். இது ஶாஸ்த்ரங்களால் அறியப்பட்ட தத்துவம், அதாவது உண்மை. நாங்கள் இப்பொழுது உன்னைப் பற்றினோம். இப்படிப் பற்றியும் கோரிய பலனை நாங்கள் பெறாவிட்டால் அது தத்துவமன்று என்றாகிவிடும். ப்ரதிபலனை உத்தேசிக்காமல் பிறர்க்கு உதவுவது தகவு எனப்படுகின்றது. எங்களுக்கு வேண்டியதைச் செய்யாவிட்டால் உன்னிடத்தில் இருப்பதாக ப்ரஸித்தமான தகவு என்ற குணம் தகவன்று என்று ஏற்படும். ஆரம்பித்த வ்ரதத்தை முடிக்காமல் போனால் அது தத்துவமன்று. நீ நேற்று ராத்ரி உதவுவதாகச் சொன்னதை நிறைவேற்றாம லிருந்தால் அது தகவன்று என்றும் கூறினதாயிற்று.

'உன் மைத்துனன்' என்று முன்சொன்ன ச்ரிய:பதித்வமே இங்கு ஒருவிதமாக விவரித்துப் பேசப்பட்டது.

20 முப்பத்து மூவர்

இப்படிச்சிறிது வேகமாகவே பேசி எழுப்பியும் உள்ளே எம்பெருமானோ பிராட்டியோ எழுந்ததாகத் தெரியவில்லை. அதற்குரிய அடையாளம் ஒன்றுமுண்டாகவில்லை. அதன்மேல் நாயகப்பெண் மறுபடியும் ஆலோசனை செய்தாள். 'திவ்யதம்பதிகள் முன் ராத்ரி, உசிதகாலத்தில் சயனித்து இப்போது உசித காலத்தில் விழித்திருக்கின்றார்கள் என்று நினைத்து இதுவரையில் பேசினோம். ஆனால் அது அப்படியேதான் நடந்திருக்கின்றதென்பதை நாம் எப்படி நிச்சயிக்கமுடியும்? இவ்வளவு சொல்லி எழுப்பியும் எழுந்துவராமையால் அவர்கள் இன்னும் விழித்துக்கொள்ள வில்லை என்று நேர் விபரீத நிச்சயமே செய்யவேண்டியதாயிருக்கின்றது. பரம தயாளுக்களான திவ்யதம்பதிகள் நேற்று நாம் வந்து நோன்பு விஷயத்தைப் பற்றி ப்ரஸ்தாவித்து ப்ரார்த்தித்துப் போன பிறகு அதே ஸ்மரணமாக இருந்து 'குழந்தைகள் என்னென்ன வஸ்துக்கள் அபேக்ஷிப்பார்களோ, தாமதமின்றிக் கொடுக்க எல்லாவற்றையும் நாம் ஸித்தமாக வைத்திருக்க வேண்டுமே' என்று சிந்தித்து அவற்றைச் சேகரித்து வைப்பதில் பல பல நாழிகள் செல்ல, நடு நிசியிலோ அதற்கும் பிறகேதானோ சயனித்துக் கொண்டிருக்கக் கூடும். ஆகையால் திருப்பள்ளியெழுச்சிபாடி விழித்துக்கொள்ளச் செய்யவேண்டுமேயன்றி வேறு வேண்டுகோளைச் செய்வது இப்போது உசிதமன்று; அது நிஷ்பலம்' என்பது அந்த ஆலோசனை. அதன் பிறகு இவ்விஷயத்தைத் தோழிகளிடம் தெரிவித்து அவர்களுடன் சேர்ந்து க்ருஷ்ணனையும் பிராட்டியையும் எழுப்ப ஆரம்பித்தாள். ஆனால் இப்போது என்னவென்று சொல்லி எம்பெருமானை எழுப்புவது என்கிற கேள்வி எழுந்தது. கீழ் நப்பின்னையின் மணாளனாகவும் அம்முகத்தால் ச்ரிய:பதியாகவும் எம்பெருமானுடைய அநுபவம் நடந்தது. இங்கும் ஒரு குணத்தையோ அவதார விசேஷத்தையோ, ஒரு திவ்யலீலையையோ எடுத்துக் கூறி அதனால் உண்டான சிறப்புள்ளவனாக அவனை அநுபவிக்க வேண்டும். அவற்றில் எது உள்ளவனாகக் கூறுவது? இவ்வாறு ஆலோசித்த நாயகப் பெண் 'இப்பொழுது எம்பெருமான் ஆழ்ந்த நித்ரையில் இருக்கின்றான். அவன் எழாமையால் நாம் வருத்தமடைந்திருக்கின்றோம். அவனுடைய நித்ரை கழிந்து நமது வருத்தமும் நீங்கவேண்டும். இதற்குத் தகுந்த விஷயத்தைக் குறித்து எம்பெருமானைப் பாடவேண்டும். அதுதானெது வென்றால் 'தேவர்களும் அஸுரர்களும் பரஸ்பரம் நித்ய சத்ருக்கள். அவர்களுக்குள் எப்போதும் சண்டை நடந்து[illegible]யிருக்கும். தேவர்கள் பக[illegible]

199552

படி நடப்பவர்கள். அதனால் பகவான் அவர்களிடத்தில் ப்ரீதியுள்ளவன். அஸுரர்கள் அவனுடைய கட்டளைகளை மீறி நடப்பவர்கள். அதனால் அவர்களுக்கும் அவனே நாதனானபோதிலும் அவர்களிடத்தில் மிகுந்த வைரமுள்ளவனாயிருப்பான். இவ்விரு சாராருக்கும் யுத்தம் நடக்கும்போதெல்லாம் பகவான் தேவர்கள் பக்ஷத்திலேயே இருந்து சத்ருக்களான அஸுரர்களைத் தொலைத்து இவர்களுக்குள்ள பயத்தையும் அதனாலுண்டான நடுக்கத்தையும் போக்குவான். இப்படி சத்ரு நிரஸநம்பண்ணி ஆச்ரிதர்களுடைய வருத்தத்தை நீக்குகின்றவன்' என்றுள்ள இந்தப் பெருமையே அது. இதில் சத்ருக்களைத் தொலைப்பது என்கிறவிது ஓர் அம்சம், ஆச்ரிதர்களுடைய வருத்தத்தைப் போக்குவது என்கிறவிது மற்றோர் அம்சம், இவ்விரண்டுக்குள் ப்ரதானம் ஆச்ரிதர்களுடைய வருத்தத்தைப் போக்குவதே. ஆகையால் இதையே முதலில் குறிப்பிட்டு எம்பெருமானை எழுப்பினாள்— முப்பத்து மூவரமரர்க்கு முன் சென்று கப்பம் தவிர்க்கும் கலியே துயிலெழாய் என்று. அமரர் தேவர் இவர்களுடைய எண்ணைச் சுருக்கியும் பெருக்கியும் மூன்று, முப்பத்து மூன்று, மூன்னூற்று முப்பத்து மூன்று, முப்பத்து முக்கோடி என்றிப்படிப் பலவாறாக சாஸ்த்ரம் கூறுகின்றது. அதில் ஒரு எண் இங்குக் கூறப்பட்டிருக்கின்றது. 'எல்லாத் தேவர்களுக்கும்' என்பது கருத்து. தேவர்களெல்லாம் மனிதரைக்காட்டிலும் மிகவும் பலிஷ்டர்களாயினும் அவர்களைக் காட்டிலும் மிகவும் பலிஷ்டர்களான அஸுரர்கள் இருக்கின்றார்களாகையால் அவர்களைப் பார்த்து இவர்கள் நடுங்கிப் போவார்கள். அப்போது அணிவகுத்துநிற்கும் தேவ ஸைந்யங்களுக்கு முன் தோன்றி எம்பெருமான் ந்ருஸிம்ஹாவதாரத்தில் ப்ரஹ்லாதனுக்கு வெகு சாந்தமாகவும் கருணையே உருவெடுத்து வந்ததாகவும் தோன்றும் போதே ஹிரண்யகசிபுவுக்கு வெகு பயங்கரமாகத் தோன்றிய ஓர் உக்ரரூபத்தைக் கொண்டது போல் தேவர்களுக்கெல்லாம் மிகவும் அநுகூலமாக இருந்தபோதிலும் அஸுரர்கள் யாவரும் எவ்வளவு பலசாலிகளானாலும் கண்டவுடனே அஞ்சி அலமந்து ஓடி நடுங்கிக்குலைந்து சிதறிப்போகும்படியாக அவ்வளவு உக்ரமான ஒரு ரூபத்தைக்கொண்டு அஸுரர்களை எதிர்த்துப்போவான். இவ்வுருவத்திலுள்ள எம்பெருமானுக்குப் பண்டிதோத்தமையான இந்த நாயகப்பெண் அபூர்வமாயும் ஆகிலும் கேட்டவுடன் இது மிகப் பொருத்தமானதென்று யாவரும் இசைந்து கொண்டாடக் கூடியதாயுமிருக்கின்ற 'கலி' என்கிற பெயரைச் சூட்டினாள். இவ்வுருவத்தில் எம்பெருமான் தங்கள் முன்னே தோன்றியவுடன் தேவர்கள் நமக்கு நாதன் இருக்கின்றான்; அவன் நம்மைக் காப்பாற்ற வந்துவிட்டான்' என்று தேறி பயமும் அதனால் உண்டான கப்பம், அதாவது கம்பம் அல்லது நடுக்கம் நீங்கப்பெறுவார்கள். 'இத்தகைய எம்பிரான் நீ. எங்களுக்கும் இப்போது வருத்தம் நீங்கவேண்டும். அதற்காகப் பிராட்டி எழுந்துவந்து கதவைத் திறக்க வெண்டும். அதற்காக நீ அவளுக்கு அநுமதி தரவேண்டும். அதற்காக நித்ரையை விட்டு எழுந்திராய்' என்றாள்.

ஆழ்ந்த நித்ரையில் இருந்தபடியால் இப்படி அழைத்தவுடன் எம்பெருமான் எழுந்திருக்கவில்லை. மேல்மேலும் எழுப்பினாள். முன் கூறியபடி ஆச்ரிதர்களை ரக்ஷிப்பதற்குரிய வவனுடைய கல்யாண குணங்களைக் குறிப்பிட்டு செப்பமுடையாய் என்று அழைத்தாள். செப்பம்— செம்மை; குணஸம்ருத்தி. யார் எங்கே எப்போது என்னகஷ்டப்படுகின்றார்களென்று அறியக்கூடிய ஸர்வஜ்ஞன். அறிந்தவுடன் 'இவர்களுடைய கஷ்டத்தை நீக்கிக் காப்பாற்ற வேணும்' என்று கருதுகின்ற பரம தயாளு. ஒரு அஞ்ஜலி பண்ணினோமாகில் அதை மிகப் பெரிதாகக் கொள்ளும் பரிபூர்ணன். அநாதி காலமாக நாம் செய்த பாபங்களை யெல்லாம் பொறுக்கும் க்ஷமாநிதி. இவர்களெங்கே நாமெங்கே என்று கருதாத ஸுசீலன். அப்பொழுதே தான் ஈன்ற கன்றினிடத்தில் கோவுக்கு எவ்வளவு ஸ்நேஹம் அல்லது ப்ரேமம் இருக்கிறதோ அவ்வளவு ப்ரேமத்தை நம்மிடத்தில் வைக்கும் வத்ஸலன். ஆச்ரித ரக்ஷணத்திற்கு வேண்டிய இக் குணங்களெல்லாமுள்ளவனே, என்று கூப்பிட்டதாக ஆகின்றது. இதன் பிறகும் எம்பெருமான் எழுந்திருந்ததாகத் தெரியாமையால் மறுபடியும் எழுப்ப விரும்பிய நாயகப்பெண் முன்கூறிய இரண்டாவது அம்சமாகிய பகைவர் ஒழிப்பையுமதற்கு முன் அதற்கேற்ற சக்தியையும் குறிப்பிட்டு திறலுடையாய் செற்றார்க்கு வெப்பங்கொடுக்கும் விமலா துயிலெழாய் என்று கூறி எழுப்பினாள்.

ஸ்ரீ:

ராமாநுஜ பதமும் பாரதந்த்ரியமும்

ஸ்ரீரங்கநாத பாதுகா ஸஹஸ்ரத்தில் அபிஷேகபத்ததியில்

'ஸ்ராதாநி யோஜ்யேவநிவதர்மேநம்
ராஜ்யாபிஷேகஞ்ச பரித்யஜந்தௌ।
ராமாநுஜௌ தௌ நநு பாரதந்த்ர்யா
தாஸாவதாஸாந் பவதீ ஜிகாய॥'

என்று ச்லோகமிருக்கிறது. 'ஓ பாதுகையே நீ ப்ராதாவான ஸ்ரீராமனுடைய கட்டளை இருக்கும்பொழுதும் திரும்பாதவனென்றும், ராஜ்யாபிஷேகத்தை ஒப்புக்கொள்ளாதவனென்றும் ப்ரஸித்தியை யடைந்தவர்களும் இருவருமான ஸ்ரீராமனுடைய தம்பிகளை (லக்ஷ்மணன் பரதன் இவர்களை) பாரதந்த்ரியத்தால் திரும்புதல் அபிஷேகத்தை ஒப்புக்கொள்ளுதலிவைகளால் ஜயித்தாய்' என்று இதன் அர்த்தம். இதன் வ்யாக்யாநத்தில் 'ஸ்ரீராம வாக்யத்தை மீறியதால் அவர்கள் உன்னைக்காட்டிலும் தாழ்ந்தவர்கள் என்று கருத்து' என்று உரைக்கப்பட்டிருக்கிறது. சம்பூராமாயணம் அயோத்யா காண்டத்தில் 'ஸ்வதஸ்ஸிதம் யஸ்ஸிந்ததாரா வாஸம் விஜயதே ஸௌமித்ராஸ்ததைவாதிஜகதி ராமாநுஜேஷு' என்று இருக்கிறது. இதன் வ்யாக்யாநத்தில் 'வேறு தாய் வயிற்றில் பிறந்தவனால் அடையமுடியாத ராமாநுஜ என்கிற பதம் எந்த லக்ஷ்மணனிடத்தில் ஸுமித்ரையின் புதல்வனாக இருந்தும் இயற்கையாகவே ஏற்பட்டு உலகத்தில் விளங்குகிறதோ' என்று அர்த்தம் எழுதப்பட்டது. இவ்விடத்தில் ராமாநுஜ என்னும் வ்யபதேசம் லக்ஷ்மணனுக்கே இருப்பதாகச் சொல்லப்பட்டிருப்பதால் ஸ்ரீபாதுகாஸஹஸ்ரத்தில் பரதன் விஷயத்தில் ராமாநுஜசப்தத்தை ப்ரயோகித்தது உபபந்நமாவென்று கேள்வி கிளம்பலாம். இது ஸரியன்று. ஸ்ரீமத்ராமாயணத்தில் பரதன் லக்ஷ்மணன், சத்ருக்நன் இம்மூவர்கள் விஷயத்திலும் ராமாநுஜபதம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. அயோத்யாகாண்டம் 75-வது ஸர்க்கத்தில் 'ஸ து ராமாநுஜஸ்ஸ்வாபி சத்ருக்நஸஹிதஸ்ததா। ப்ரதஸ்தே ஹரதோ யத்ர கௌஸல்யாயா நிவேசநம்' என்பதில் பரதன் விஷயத்திலும், ஸுந்தரகாண்டம் 28-வது ஸர்க்கத்தில் 'யத்ராயமேவாத்ரம் விஸஸர்ஜ ஜீவா ராமாநுஜம் லக்ஷ்மணபூர்வஜஞ்ச' என்பதில் லக்ஷ்மணன் விஷயத்திலும், உத்தர காண்டம் 69-வது ஸர்க்கத்தில் 'ஜகே தோ ஹுதவஹ்யம் வஷ்யாமநம் ஸஹாத்மநா॥ ராமாநுஜேந வீரேண லவணம் ராக்ஷஸோத்தமம்' என்பதில் சத்ருக்நன் விஷயத்திலும் ராமாநுஜசப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. விரிவுக்கஞ்சி வேறு இடத்தில் அவர்கள் விஷயத்தில் ராமாநுஜ பதப்ரயோகம் காண்பிக்கப்படவில்லை. ஆகையால் பரதன் விஷயத்தில் ராமாநுஜபதத்தை ப்ரயோகித்தது யுக்தமே.

ஸ்ரீமத்ராமாயண பாலகாண்ட வ்யாக்யாநத்தில் அவதாரிகையில் ஸ்ரீபதி லக்ஷ்மணனாக அவதரித்து ராவணபுத்ரனைக் கொன்று பகவான்விஷயத்தில் சேஷத்வமாகிற விசேஷ தர்மத்தையும், பரதனாக அவதரித்து கந்தர்வர்களைவிரட்டி பகவத்பாரதந்த்ரியமாகிற விசேஷ தர்மத்தையும் அநுஷ்டித்ததாகச் சொல்லியும், இந்த பாலகாண்டம் 5-வது ஸர்க்கவ்யாக்யாநத்தில் எற்கனவே சொல்லப்பட்ட சேஷத்வபாரதந்த்ரியங்களை உதாஹரணங்களைக் கொண்டு ஸமர்த்தித்தும் இருப்பதால் 'லக்ஷ்மணன் பரதன் இவர்கள் ஸ்ரீராமவாக்யத்தை மீறினதால் பரதந்த்ரர்களல்ல, ஸ்ரீராமவாக்யத்தின்படி நடந்ததால் பாதுகைதான்பரதந்த்ரை' என்று இங்கு அருளிச்செய்தது ஸரியா என்று சங்கை உண்டாகலாம். இதுவும் ஸரியன்று. ஸ்ரீமத்ராமாயண வ்யாக்யாநத்தில் சேஷத்வ பாரதந்த்ரியங்களை லக்ஷ்மணன் பரதன் இவர்கள் முறையே அநுஷ்டித்ததாக நிரூபித்து, 'ககுஸ்தவம்சத்தில் ஸ்ரீராம! பரத்வம் விபவம் முதலிய அவஸ்தைகளிலும் எல்லா காலத்தி

ஸ்ரீ:

வேதாந்தாசார்யர்

'जयति सकलविद्यावाहिनीजन्मशैलः
जनिपदपरिवृत्तिश्रान्तविश्रान्तिशाखी।
निखिलकुमतिमायाशर्वरीबालसूर्यः
निगमजलधिवेला देशिकेन्द्रो दयालुः॥

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகரான தூப்புல் துரந்தரர், 'அன்றிவ்வுலகினையாக்கி.......... நோய்கள் தவிர்த்தனனே' என்றபடி, ஸாக்ஷாத் பகவதவதாரம். ஸ்ரீ ஹயக்ரீவனின் கடாக்ஷவிசேஷத்தைப்பெற்றபடியால் வேதாந்தவேத்யன். வேதாந்தமே இவர் விஷயமாதலால் வேதாந்தாசாரியானர். வித்யாபிமானி தேவதைகளெல்லாம் இவரை வந்து வரிக்கும்படி ஜ்ஞானோத்கர்ஷத்தையடைந்தவராதலின் திருவரங்கத்தெம்பெருமான் தனக்கு அஸாதாரணமான 'வேதாந்தாசாரியர்' என்ற திருநாமத்தை இவருக்குச் சாற்றி மகிழ்ந்தார். இந்த பிருது வேறொருவருக்கும் கிடைக்கவில்லையென்று பின்புள்ளோர் அநுஸந்தித்தார்கள். இவ்விஷயத்தை ஸ்வாமி தாமே ஸ்ரீ அதிகரணஸாராவளியில் ஸர்வலோகநாமரூபைககர்த்தாவான ஸ்ரீரங்கநாதனால், 'தத்தாம் வேதாந்தாசார்யஸம்ஜ்ஞாம்' என்றருளிச்செய்திருக்கிறார். ஸ்ரீ அதிகரணஸாராவளியில் ஸாதநாத்யாய உபயலிங்கபாதச் சுருக்கமாக நம் ஸ்வாமி அருளிய,

'சுத்தாநந்தே ததித்தம் சுபகுணஜலதௌ ஸத்யநித்யஸ்வதேஹே,
தேவீபூஷாயுதாத்யை ரதிமயநிகநத்போக-லீலாவிபூதௌ ।
சேஷித்வாதாரபாவப்ரப்ருதி பஹுவிதஸ்-தாஸ்நுஸம்பந்ததீப்தே
த்ருஷ்டிஸ்வர்க்காபவர்க்கப்ரஸவிதரிஹரௌ நிர்நிமேஷா ச்ருதிர் ந:'

என்ற ஒரு ச்லோகத்திற்கே இந்த பிருது போதாது.

நம் ஸ்வாமி வேதாந்தங்களில் நிலவர். அதாவது:— பகவானுடைய ஸ்வரூபகுணாதிகளைச் சொல்லும் உபநிஷத்துகளின் அர்த்தங்களையெல்லாம் முற்றிலும் உணர்ந்த 'உணர்முழுநலம்'. ஆச்ரிதர்களை தப்புவழிகளில் போகாதபடி தன் தேஜஸ்ஸினாலும் போதனைகளாலும் தடுத்து நல்வழிகாட்டிய நிலவர். 'ச்ருதீனாம் விச்ரமாயாலம்' என்றபடி வேதாந்தங்களுக்கு விச்ரமஸ்தாநமாய் வேதமார்க்கதர்மத்தை நிலைநாட்டியவர். 'நன்மையால் மிக்க நான்மறை

னும் நான் உமக்கு பரதந்த்ரனாக இருக்கிறேன்' என்பதைத் தெரிவிப்பதும், ஆரண்யகாண்டத்திலிருப்பதுமான 'பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷசதம் ஸ்திதே' என்கிற லக்ஷ்மணனுடைய விஜ்ஞாபனவாக்யத்துடன் சேராது. பாரதந்த்ரியமென்றால் ஸ்ரீராமன் கட்டளைப்படி செய்தால், ஸ்ரீராமன் காட்டுக்குத்தன்னுடன் வரவேண்டாமென்று அயோத்தியிலும் வனவாஸஸமயத்திலும் லக்ஷ்மணனிடம் சொல்லியும் லக்ஷ்மணன் ஸ்ரீராமனுடன் கானகம் சென்றான். ஸ்ரீராமன், தான் பட்டாபிஷேகம் செய்துகொள்ளும்பொழுது லக்ஷ்மணனை யௌவராஜ்யாபிஷேகம் செய்துகொள்ளும்படி கட்டளையிட்டார். கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். லக்ஷ்மணன் அதை அங்கீகரிக்கவில்லை. பரதனிடம் யௌவராஜ்யாபிஷேகம் செய்துகொள்ளும்படி சொன்னார். பரதன் அதை ஒப்புக்கொண்டான். ஆகையால் லக்ஷ்மணனிடம் இப்பாரதந்த்ரியமில்லை. பரதனிடம்தானிது இருக்கிறது என்று சொல்வதும் ஸரியன்று. ஸ்ரீராமன் பல காரணங்களைக் கொண்டு சித்ரகூடத்திலும் உத்தர காண்டத்தின் கடைசியில் சொல்லப்பட்ட மஹாப்ரஸ்தானப்படி செய்த தன் ப்ரயாணத்தின் காலத்திலும் ராஜ்யாபிஷேகம் செய்துகொள்ளும்படி பரதனிடம் சொல்லியும் அதை அவன் ஒப்புக்கொள்ளாததால் அவனிடமும் இப்பாரதந்த்ரியமில்லையே. ஆகையால்தான் ஸ்ரீராமனுக்கு லக்ஷ்மணன் பரதன் இவர்கள் பரதந்த்ரர்களல்ல, பாதுகைதான் பரதந்த்ரை என்று 'ஹ்ராதநீயொமெரவீ' என்கிற ச்லோகத்தில் அருளிச்செய்யப்பட்டது. இதன் விரிவு பிறகு.

யாளர்கள்' என்றபடி வேதாந்தங்கள் நன்மையில் மிகும் அர்த்தங்களையே போதிக்கின்றனவென்று நிர்வஹித்தவர்.

இப்பரமாசார்யன் 'ஸர்வதர்சிவிமுக்தாத்மா ஸர்வஜ்ஞோஜ்ஞாநமுத்தமம்' என்றபடி வேதாந்தங்களுக்கே ஆசார்யன். ச்ருதிகள் சிலவிடங்களில் சொல்லவேண்டிய விஷயங்களைச் சொல்லாமலும் சொல்லியவிடங்களில் தெளிவாக நிரூபிக்காமலும் இருக்கின்ற விஷயங்களை எப்படி நிரூபிக்கவேண்டுமென்று எடுத்துக் காட்டினர். வேதங்களுக்கும், ஸ்ரீராமாநுஜதர்சனத்திற்கும் குமதிகளாலும் அல்பஜ்ஞர்களாலும் உண்டான மாலிந்யத்தை நிவர்த்தி செய்து உபநிஷத்துக்களையும், ஸத்ஸம்ப்ரதாயங்களையும் 'ஸ்திரநீதிபஞ்சரஸ்தா;' என்றபடி நீதிகளாகிற கூட்டிலிருப்பவையாகச் செய்து வைத்தார். உபநிஷத்துக்களில்மறைந்திருக்கின்ற வாஸ்தவார்த்தங்களை மந்தமதிகளுக்கும் 'வேதத்திநட்பொருள் நிற்கப்பாடி என்னெஞ்சுள் நிறுத்தினன்' என்றபடி இவர் போதிக்கும் திறமையைப் பார்த்து இவருபதேசங்களில் ஸகல வேதார்த்தங்களும் 'ஆகர்ஷணி நிகமாந்தஸரஸ்வதீநாம்' என்று தானாகவே வெளிவந்தன. இம்மஹான் பகவானுடைய நியமனத்தையும் ஆசார்யர்களுடைய நியமனத்தையும் ஒருங்கே பெற்று வேதாந்த ப்ரவசனம் செய்து உபயவேதாந்தங்களும் ஒரே அர்த்தத்தை உத்கோஷிக்கின்றனவென்று நிரூபித்துக்காட்டியிருக்கிறார். இப்புருஷோத்தமன் ஆசார்யனுக்கு லக்ஷணமாகச் சொல்லப்பட்ட ஷோடச லக்ஷணங்களையும் பூஷணமாக்கிக் கொண்டவர்.

பகவானுக்கு ச்ரியப்பதித்வஜகத்காரணத்வ குணங்கள்போல் ஸ்ரீதேசிகனுக்கு ஆசார்யத்வோபயுக்தங்களான ஸமஸ்த கல்யாண குணங்களும் பூஷணமாய் நின்றதால் இவரே வேதாந்தாசார்யராவார். பெரியோர்கள் இவர் ஸர்வாசார்யகடாக்ஷவிஷயபூதராயிருந்ததையும் விலக்ஷணமான இவருடைய திவ்யகல்யாணகுணங்களையும் குத்ருஷ்டிநிரஸனபூர்வகமான உபயவேதாந்த ஸ்தாபகப்ரவர்த்தகத்வாதி குணங்களையும் அனுபவித்து இவரே வேதாந்தவேத்யரென்று உத்கோஷம் செய்திருக்கிறார்கள். இவரது திவ்யமங்கள விக்ரஹத்தையும் முக்கியமாய் அடியார்களின் உள்ளத்தில் ஸகலதத்வார்த்தங்களையும் நன்குபதிவிக்கும்வியாக்யாமுத்ரையால் பொலிவடைந்து விளங்கும் திருக்கரத்தையும் ஸேவித்தவர்களுக்கு இவ்வாசார்யோத்தமன் திருவடிஸம்பந்தத்திற்கு மேலான பலனில்லையென்று தெரிந்து கொள்வார்கள். இவர் அவதரித்தபிறகே உபயவேதாந்தங்களும் ஒரு புது ஒளிபெற்று நின்றன. சரணாகதியாகிற உபாயம் ஸர்வருக்கும் ஸகலபலஸாதனமாயமைந்தது. உலகிற்கு க்ஷேமம் ஏற்பட்டது. இவ்வாசார்யரத்நத்தை சரணமடைந்த பாக்யசாலிகள் ப்ரபந்நனுக்கு வேண்டிய குணபூர்த்தியையும் பகவத்பாகவத கைங்கர்யத்தையும் பெற்று மகிழ்ந்தார்கள்.

விபவதசையில் ஸ்ரீதேசிகன்ஐந்துவயதில் 'ப்ரதிஷ்டாபிதவேதாந்த:'எனப்பெயர்பெற்று இருபது வயதிற்குள் ஸகல சாஸ்த்ரங்களையும் கற்று ஒரு யாமத்தின்பாதியில் 'ஸ்ரீபாதுகாஸஹஸ்ரம்'என்றமஹாக்ரந்தத்தைச்செய்து தன் அதிமாநுஷசக்தியைக் காட்டியிருக்கிறார். பற்பல சாஸ்த்ரங்களைக் கற்கப் போதுமான புத்தியும் அவகாசமும் இல்லாத அடியார்களுக்கு அவற்றின்ஸாரார்த்தங்களை எடுத்துக் காட்டி ஸ்ரீதேசிகன் செய்திருக்கும் மஹோபகாரத்தை அளவிடமுடியாது. லோகத்தில் ஜநங்களுடைய பின்னருசியை யநுஸரித்து அவர்களெல்லோருக்கும்பயன்படுமாறுஸ்தோத்ரரூபமாயும் காவ்ய,நாடக, கத்யரூபங்களாயும் ஸம்ஸ்க்ருதமும் தமிழ், மணிப்ரவாளம், ப்ராக்ருதம் என்கிறபாஷைகளில் ஸங்க்ரஹமாயும் விஸ்தாரமாயுமுள்ளனவாய் ஏராளமான ஸ்ரீஸூக்திகளை வழங்கிய வள்ளல் இவரே. ஸ்ரீபோதாயநர் முதலான முனிகளாலே பஹுமதிக்கப்பட்ட ஸாரார்த்தத்தை யுடையதும் மோக்ஷத்திற்கு ஸோபானம் போன்றதுமான பரமபதஸோபானம் முதலிய க்ரந்தங்களை யருளிய கருணாநிதி இவர்தான். இவர் அருளிச்செய்திருக்கும் அனேக க்ரந்தங்களில் ஒவ்வொன்றின் பெருமையையும் அருமையையும் அளவிட்டுச் சொல்வது கடலைக்கையாலிறைப்பதுபோலாகும். ஒவ்வொரு க்ரந்தமும் பூர்ணமானதோர் அத்யாத்மசாஸ்த்ரம். வேதாந்தங்களில் இவர் அறியாத ப்ரதேசமில்லை. இவர் செய்த க்ரந்தங்களெல்லாம் அல்பமாகத் தோன்றும்படி தன் அவதாரத்தின் முக்கிய ப்ரயோஜனமாகக் கருதி ப்ரபதனகலாஜங்மஜலதியானதும் அம்ருதம்போன்றதுமான 'ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம்' என்ற ஸ்ரீஸூக்தியை யருளிச்செய்திருக்கும் உபகார

விசேஷம் ஒன்றே வானேறப்போமளவும் வாழ்வை யளிக்கும் ஸர்வலோகோஜ்ஜீவன ஹேதுவாக வமையும்.

'வேதோ வேதவிதவ்யங்கோ வேதாங்கோ வேதவித்கவி:,' என்ற எம்பெருமான் ஸ்ரீராம கிருஷ்ணுத்யவதாரங்களில் நிறைவேற்றமுடியாத ஸகல சேதனேஜ்ஜீவனத்தை ஆசார்ய ரூபமாக அவதரித்தே செய்தபடியால் பகவான் தன்ஸர்வஸ்மாத்பரத்தைவிட ஆசார்ய ரூபியாய் ஏற்றம் பெருகிறுர். அப்படி ஆசார்ய ரூபாவதாரங்களில் செய்திருக்கும் சேதனேஜ்ஜீவனமானகார்யங்களில் ஸ்ரீதேசிகனுயவதரித்தருளிய உபகாரவிசேஷம் விஞ்சியிருந்ததால் தான் நம் வேங்கடநாதனை 'வென்றிபுகழ் திருவேங்கடநாதனென்னும் குருமாமணியென்று கொண்டாடுகிறேம். மற்றைய ஆசார்யர்களும் வேதாந்தப்ரவசனம் செய்திருந்தபோதிலும் அவர்களுடைய ப்ரவசனம் இவருடையதைப் போல் ஒரேரீதியில் ப்ரயோஜனமுள்ளதாக வில்லை. ச்ரீயப்பதிதொடக்கமாக எம்பெருமானர்பர்யந்தமான குருபரம்பரையிலுள்ள ஆசார்யர்கள் தனித்தனியாகவும் சேர்ந்தும் செய்திருக்கும்உபகாரங்களையும்ஸ்ரீ தேசிகன்மட்டும் செய்திருக்கும் உபகாரங்களையும் சீர்தூக்கிப் பார்த்த பூர்வர்கள் ஸ்ரீதேசிகனின் உபகாரங்கள் உயர்ந்தவையென்றும் அவரை மற்ற ஆசார்யர்களைவிட அதிகமாகக்கொண்டாட வேண்டுமென்றும் நிர்ணயித்தார்கள். இம்மாபுருடன் ஒருஸமயத்திலும் ஒருவிதத்தாலும் கலக்கமுடியாதஜ்ஞாநோத்கர்ஷத்தையடைந்து வேதாந்தங்களையே தமது ஆயுள்முழுவதும் ப்ரவசநம் செய்வதை வ்ரதமாகக்கொண்ட ஸர்வஜ்ஞர்.

அன்பர்களே! நீங்களெல்லோரும்வாருங்கள். புகழொடு தோன்றிப் பெரும்புகழெய்திய ஆகமமௌலிகுருவினடி வணங்குவோம். மறையின் மறைப்பொருளை மாண்புடனே விளக்கிப் பறைதரும் காவலன் சுடரடி தொழுதெழுவோம். தவநெறிகாட்டிய தகைமை அண்ணலின் உவமையிலாவருண்மொழி பயின்றுய்வோம். வாதிசிங்கமாய் வந்த வேங்கடத்துறைவனை ஓதியுணர்ந்து பணிந்துமகிழ்ந்திடுவோம், எல்லோரும் வாருங்கள்.

ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாய பக்தஜநங்களுடைய மனஸ்ஸாகிற மாநஸஸரஸ்ஸுக்கு ராஜஹம்ஸம்போலிருக்கும் இம்மஹாசார்யன்பரம கிருபையுடன் அடியார்களுக்குச் சொல்லிக்கொடுத்த பொன்மொழியொன்றை நமெல்லோரும் ஹ்ருதயத்தில் தரித்துகொள்ளுவோம்.

ஸத்வஸ்தாந் நிப்ருத: ப்ரஸாதய
ஸதாம் வ்ருத்திம் வ்யவஸ்தாபய,
த்ரஸ்ய ப்ருஹ்மவிதாகஸஸ்த்ருணமிவ
த்ரைவர்க்கிகாந் பாவய|
நித்யேசேஷிணி நிக்ஷிபந் நிஜபரம்
ஸர்வம் ஸஹே ஸ்ரீஸகே,
தர்மம் தாரய சாதகஸ்ய குசலிந்
தாராதரைகார்திந: ||'

[ஸாத்வீகர்களோடு ஸாவதானத்துடன் கூடிப் பழகி அவர்களுடைய அநுக்ரஹத்தைப் பெறுவோம். பெரியோர்களின் ஆசாரத்தை ஸ்தாபனம்செய்வோம். பாகவதாபசாரத்திலிருந்து பயப்படுவோம். தர்மம் அர்த்தம் காமம் என்ற மூன்று புருஷார்த்தங்களில் நிஷ்டையை யுடையவர்களைத் த்ருணம்போல் நினைப்போம். நித்யனும் ஸர்வசேஷியாயும் எல்லா அபராதங்களையும் பொருத்துக்கொள்பவரானச்ரியப்பதியினிடத்தில்நம்முடைய பரத்தை ஸமர்ப்பிவித்துவிட்டு தர்மத்தை (வர்ணச்ரம) தரித்துக்கொண்டு மேகமொன்றையே எதிர்பார்க்கும் சாதக பக்ஷியைப்போல் பகவானின் கிருபையையே எதிர்பார்த்துக் கொண்டிருப்போமாக.]

குருபுங்கவரே, கருணாநிதி நின்
அருளாலறிவையருளாயரசே
திரிகின்றமனம் திரியாதுனையே
அறிவாலடியார் தொழு தேசிகனே.

ஸ்ரீ:

கார்த்திகைப் பூராடம்

வானத்தில் மின்னி மிளிரும் விண்மீன்கள் எண்ண இயலா. இவற்றின் பெயர்களை உற்றுநோக்கின் அவை புராணவரலாறுகளையும் நிறைமொழி மாந்தரை நினைவூட்டுவனவாகவும் ஆன்மவின் ஞான உண்மைகளை உணர்த்துவனவாகவும் உள்ளன.

'நக்ஷத்திரம்' என்ற சொல் ஒளி குன்றாது இயல்பு ஒளியுடன் இரவில் புலனாவது என்று பொருள்படும். இச்சொல் எல்லா விண்மீன்களையும் குறிக்குமாயினும், சந்திரன் எந்த விண்மீன்களின் வழியே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விண்மீனை நள்ளுவதே (நேசித்திருப்பதே) போன்று ஊர்ந்து செல்வதாகக் காணப்படுகிறனோ அம் மீன்களையே முக்கியமாகக் குறிக்கும். விண்மீன்களை மதிநள்ளும் காலத்தைக் கொண்டே முதலில் நாள் கணக்கிடப்பெற்றது. ஆகவே நள்ளுவதினின்று நாள் எனப்பட்டது. மதிநள்ளும் மீன்களும் நாள்மீன் எனப் பெற்றன. இவை மதியின் மனைவியர் என்ப. இவையே அச்வினி, பரணி முதலான பெயர்களைக்கொண்ட மூவொன்பது நக்ஷத்திரங்கள் எனப்படுவன. மேலும் 'நக்ஷத்திரம்' என்ற சொல் விண்மீன்தொகுதிகளையும், மதிநிற்கும் நாள்மீனையும் $13^1/_3$ பாகை என்ற ஒரு அளவையும் குறிக்கும்.

இந்த நக்ஷத்திரங்களின் பெயர்கள் வேதகாலத்தினின்று வழக்கில் இருந்து வருகின்றன. தைத்திரீயஸம்ஹிதையில் (4-4-10) அதிதேவதைகளுடன் இருபத்தேழு நக்ஷத்திரங்களின் பெயர்களும் கிருத்திகை முதலாசக் கூறப் பெற்றிருப்பது இதற்குச் சான்றாகும். மண்ணுலகிற்கு மிகவும் அண்மையிலுள்ள மதி, கதிரவனது ஒளியை மட்டுமின்றி, இந்த நக்ஷத்திரங்களின் ஒளியையும் பெற்றுத் தனது தண்கதிர்களின் வாயிலாக மானிட வாழ்க்கையில் மாறுபாடுகளைச் செய்ய வல்லவனென்று ஆன்றோர்கள் அறிந்து நமக்குக் கூறியிருக்கின்றனர். எனவே இன்றும் இந்த நக்ஷத்திரங்கள் நமது வாழ்க்கையுடன் நன்கு இணைக்கப்பெற்றுள.

நாள்மீன்கள் நவக்கோள்களைத் தலைமை கொண்டுளவென்றும், அம் மீன்கள் மதியுலவுங் காலத்திற் பிறந்தோரது வாழ்க்கை நிகழ்ச்சிகளில் ஏற்படும் குறித்த மாறுபாடுகளைக் கோள்களின் இயல்புகளைக் கொண்டு அறியலாமென்றும் பராசரர் முதலிய சோதிடவல்லுனர் கூறியுள்ளனர். சூரியன், சந்திரன், செவ்வாய், இராகு, குரு, சனி, புதன், கேது, சுக்கிரன் என்ற முறையே கிருத்திகை முதலாகவுள்ள நக்ஷத்திரங்களின் தலைவர்களாம். 'மாதம் (12) சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி. இவற்றிற்கு நக்ஷத்திரங்களாவன முறையே சித்திரை, விசாகம், மூலம், உத்தராடம், அவிட்டம், பூரட்டாதி, அசுவினி, கார்த்திகை, மிருகசீரிடம், பூசம், மகம், உத்திரம். இவை அந்த நக்ஷத்திரங்கள் கூடுகையில் இப் பெயர் பெறும்.'

நாள்மீன்கள் பெரும்பாலும் அவை காணப்பெறும் வடிவங்கட்கேற்ப பெயரிடப்பெற்றுள்ளன. மேலும் இப் பெயர்கள் அகப்பொருளில் மனிதன் பிறவிக்கடலையும் கடந்து இறைவனடி சேரும் வகையை உணர்த்துவதாக உள. அவற்றுள் 'பூராடம்' என்ற நாள்மீனைப்பற்றிக் கூறுவாம்.

'பூர்வாஷாடா' என்பது இருபதாவது நக்ஷத்திரம். 'பூராடம்' என்பது இதன் தமிழ்ப்பெயர். 'ஆஷாடா' என்ற சொல் புரசுத்தடி என்று பொருள்படும். முன்னும் பின்னுமாக இரண்டு தடிகளை வைத்ததுபோல் நான்கு விண்மீன்களைக் கொண்ட தொகுதியாகக் காணப்படுகிறது. பூர்வாஷாடா என்பதால் முன்னுள்ள தடிபோன்ற இரு மீன்களைக் கொண்டது என்றாகிறது. அகப்பொருளில் 'பொறுமை மிகவு' என்று பொருள்படும். பூர்வாஷாடா எனின் 'முன்பொறுமை' என்று கொள்ளத்தகும். மூலப்பொருளாகிய பரம்பொருளைக் காண்பதில் சகிப்புத்தன்மை மிக வேண்டும். இடையே குறுக்கிடும் மன எழுச்சிக்கு இடந்தரலாகாது. இந்த நக்ஷத்திரத்தின் தலைவன் சுக்கிரன் (ஸத்வம்) எனவே, ஸத்வகுணத்துடன் கூடிய பொறுமையே குறிக்

கோளையடையச்செய்யும் என்றும் உணர்த்துகிறது.

இனிக் கார்த்திகைத் திங்களுக்குச் செல்வோம். ‘கார்த்திகம்’ (கார்த்திகீ) கிருத்திகையைச் சார்ந்தது என்பது வெளிப்பொருள். க்ருத்தி என்றால் தோல் அல்லது மறைவு என்று பொருள்படும். ‘க’ எனின் இன்பம் என்பது பொருள். ஆகவே, எங்கும் நிறைந்த அந்த உறுதி இன்பம் மாயை என்னும் மறைப்பால் மறைக்கப்பெற்றுள்ளதென்றும் ஆதலின் மறைப்பு நீக்கப்பெற்றாலன்றி அது உணரப்படாதென்றும் இம் மாதப்பெயர் உணர்த்துகின்றது. என்ன செய்யவேண்டும் என்பதை அடுத்த மாதப்பெயர் அறிவிக்கின்றது. ‘கார்த்திகீ’ என்ற சொல்லே கார்த்திகை என மருவியது.

‘கிருத்திகை’ என்ற சொல் ‘தோல்’ அல்லது ‘உறை’ என்று பொருள்படும். அறுமீன்களைக்கொண்டு வாளின் உறைபோன்ற வடிவில் காணப்படுவதால் இந்த நக்ஷத்திரம் இப்பெயர் பெற்றது போலும். இதன் தலைவன் சூரியன். அதிதேவதை அக்னி. சூரியன் இதில் ஸஞ்சரிக்குங்காலத்தில் வெப்பம் அதிகமாகி மழையும் பொழிவதுண்டு. ஆகவே இக்காலம் அக்னி நக்ஷத்திரம் எனப்படும். இத்தொகுதியின் தனி மீன்களும் அப்ரயந்தி (மேகத்தைத் தோற்றுவது), மேகயந்தி (கார்முகிலாகச் செய்வது), வர்ஷயந்தி (பொழியச் செய்வது) என்பன போன்ற பெயர்கள் மறைநூல்களில் அளிக்கப்பெற்றுள.

ஸப்த இருடிகளில் வசிட்டரொழிந்த மற்ற அறுவரின் தேவியரை அக்நியொருகால் மோஹித்தனன். இதையறிந்த அக்நியின் தேவியாகிய சுவாகை ஒருவேளை அவர்களால் தம் நாயகனுக்குச் சாபம் நேரிடக்கூடுமென பயந்து அருந்ததி நீங்கிய அறுவரைப் போலுருக்கொண்டு அக்நியைக் கூடினள். இதையறிந்த ஆறு இருடிகளும் தம் தேவிமார் குற்றப்பட்டனர் என்று தமது தேவியரை வினவினர். இருடிபத்தினிகள் உண்மை கூறவும், இருடிகள் தேறாயினர். இதனாலறுவரும் தனிக்கூட்டமாக நக்ஷத்திர பதம் அடைந்தனர். இவர்களறுவரும் குமாரக்கடவுளுக்கு முலைப்பாலூட்டி விரதபலமடைந்தனர்.

அகப்பொருளில், ‘மறைப்பு’ என்று இச்சொல் பொருள் கொள்ளத்தகும். இன்பவடிவாகிய இறைவனது இருப்பு மாயையெனும் மறைப்பினால் பநக்கப் பெற்றுள்ளதால் மனிதன் இறைவனை உணர்வதற்கில்லாமல் திகைக்கின்றான் என்பதை உணர்த்துகின்றது. இத்தொகுதியின் அதிபன் சூரியன் (தூண்டுவோன்) மறைக்கப் பெற்றிருப்பினும் இறைவனைக் காணவேண்டும் என்ற உணர்ச்சி உள்ளத்தில் எழுகின்றது என்பதைக் குறிப்பதாக உளது.

கார்த்திகை மாதம் சாலச்சிறந்தது. ‘இறையவனே! கார்த்திகையிற் கார்த்திகை நாள் எழிற்துறையல் வருகலியா!’ (தேசிகமாலை. பிரபந்தசாரம். 13) என்றும், ‘உலகறிய மலிபுகழ்க் கார்த்திகைமாதத்தில் உரோகிணி நாள் .. .. .. பாண்பெருமாளை’. (தேசிகமாலை. பிரபந்தசாரம். 12) என்றும் மறைமுடித் தேசிகனார் அருளிச்செய்தவாறு திருமங்கையாழ்வாரும் திருப்பாணாழ்வாரும் அவதரித்த பெருமையுடையது கார்த்திகைத் திங்கள். ‘கார்த்திகையிற் கார்த்திகைநாள் இன்றென்று காதலிப்பார்’ என்பது. (உபதேசரத்தினமாலை. 9) திருமங்கையாழ்வார் திருநக்ஷத்திரத்தை, திருக்கலிகன்றிதாஸரென்று திருநாமத்தையுடையராய், சதிருடைய தமிழ் விரகராய், அருளிச்செயல் நாலாயிரம் பாட்டுக்கும் அர்த்தோபதேசம் பண்ணுமவராய்ப் போருகிற லோகாசார்யரான நம்பிள்ளையும் தத்வச்யரும் மிகவும் பரிபாலித்துப் போருவர்களென்று, பெரியோர்கள் அருளிச்செய்து போருவர்கள். பிள்ளை ஆதரிக்கிறது ஆழ்வார்கள் திருவடிகளில் ப்ராவண்யத்தாலே. தத்வச்யர் ஆதரிக்கிறது பிள்ளையுடைய திருநக்ஷத்திரமும் அதுவென்றாகவேணும்.’ ‘இனி இவர்க்கு அத்யந்தாபிமதராய், நம்பாழ்வாருடைய அவதாரமென்னலாம்படியான நம்பிள்ளைக்கு இத் திருநாமம் வந்தபடி:- நஞ்சீயர் திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரக்ரந்தஸங்க்யையாக ஒரு வ்யாக்

யானம் செய்தருளி, அந்தப் பட்டோலையை நன்றாக எழுதிக்கொண்டு வரும்படிக்குத் தம் திருவடிகளை ஆச்ரயித்த வரதராஜரான இவர் திருக்கையிலே கொடுத்தருள, இவர் ஊரேறப் போகிறபோது ஆற்றிலே ஒழுகிப்போக, பின்போர் அலேகத்திலே அதின்படி ஒன்றும் தப்பாதபடி எழுதிக்கொண்டுவந்து, நஞ்சீயர் ஸந்நிதியிலே வைக்க, அத்தை அவிழ்த்துத் திருக்கண் சாத்தியருளி, அது மிகவும் நன்றாயிருக்கையாலே, 'இது ஏது' என்று கேட்டருள, இவரும் தத்ஹேதுக்களையெல்லாம் விண்ணப்பம் செய்யக்கேட்டு, 'இது ஒரு புத்திவிசேஷமிருந்தபடியென்' என்று மிகவும் உகந்தருளி, 'நம்முடைய பிள்ளை- திருக்கலிகன்றி தாஸர்' என்று அருளிச்செய்ய, அன்று தொடங்கி 'நம்பிள்ளை' என்று திருநாமமான இது லோகப்ரஸித்தமிறே.' 'நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை, என்பரவர் தமேற்றத்தால்' என்பது உபதேசரத்தின மாலை. (50)

'ஐப்பசியிற் பூராடத்தவதரித்தான் வாழியே' என்பது திருக்குருகைப்பிரான் வாழித் திருநாமம். (வாழித்திருநாமப் பாமாலை. பக்கம் 14. திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கவெளியீடு 46. 29-3-53ல் திருவரங்கேறியது.) கார்த்திகைப் பூராடத்து வையமெலாம் மறைவிளங்க அவதரித்த மஹான் தற்போது ஸ்ரீ அஹோபிலமடம் திவ்யாஸ்தாநம் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் மிக்க கீர்த்தியுடன் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரோபயவேதாந்தாசார்ய ஸ்ரீபகவத்ராமாநுஜஸித்தாந்தநிர்த்தாரணஸார்வபௌம ஸ்ரீ வண்ஸடகோப ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ர மஹாதேசிகன். இச் சான்றோர் தலைவரது ஜ்ஞாநம், அநுஷ்டாநம், வைராக்கியம், கல்யாண குணங்கள் முதலியன உவமையற்றன. மன்புகழ்ப் பெருமை தங்கள் மரபுளோர் புகழ்களெல்லாம் தன் புகழாக்கிக்கொண்ட உயர்குணத்தோன்றலே இவ்வழகியசிங்கர். மற்றென் புகழ்கின்றது ஏழை.

'ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனே இந்த ஸ்தாநத்திற்கு இப்படி தனக்குத் தகுந்த அழகியசிங்கரை எழுந்தருளப்பண்ணிக்கொண்டானே தவிர நாம் செய்யும் காரியமன்று. இதை நன்றாகப்பராமர்சித்துப் பார்த்தால் நம் ஸம்ப்ரதாயம் மேன்மேலும் அபிவ்ருத்தமாக வேணுமென்கிற திருவுள்ளம் ஸ்ரீந்ருஸிம்ஹனுக்கு இருப்பது தெரியவருகிறது. இரண்டு அழகியசிங்கர்களாக எழுந்தருளியிருந்து தன்னுடைய திருவாராதனங்களைப் பண்ண வேணும் என்று அவன் ஸங்கல்பித்துக் கொண்டு நமக்கு சரீரத்தில் அஸ்வாஸ்த்ய வ்யாஜேந ஸ்ரீ அழகியசிங்கரையும் நம் மூலமாக ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளப்பண்ணிக் கொண்டான். பால்யாதாரம்பித்து அழகியசிங்கர் ஸ்தாநார்ஹராக எழுந்தருளியிருந்தது நமக்குத் தெரிந்திருந்தாலும், உலகத்தார்க்குத் தெரியும்படி நம்மால் ஸ்ரீமதுராந்தகத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸம்ஸ்க்ருதகலாசாலைக்கு அத்யக்ஷராக எழுந்தருளப்பண்ணிவைத்தும், அங்குள்ள ப்ரவசநகர்த்தாக்களுக்கு ஸ்ரீபாஷ்யாதிக்ரந்தங்களை சிந்தனுரூபகாலக்ஷேபம் ஸாதிக்கும்படியும் நியமித்து, அதன் மூலமாக ஸ்ரீஅழகியசிங்கரின் ஜ்ஞாநவைராக்யாதிகுணங்களை ப்ரகாசப்படுத்தியுமிருக்கிறோம். அழகியசிங்கர் எங்கும் ப்ரதிக்ரஹம் பண்ணியதே கிடையாது. நம் மாலோலவித்வத்ஸதஸில் கூட ஸம்பாவனையை வாங்குவதே கிடையாது. இதனால் ஸ்ரீ அழகியசிங்கருடைய வைராக்யமானது நன்கு விளங்குகிறது. இப்போது நம்மோடு கூடவிருந்து காலக்ஷேபம் ஸாதித்து வருவதிலிருந்து ஜ்ஞாநாதிகளும் ஆத்மகுணங்களும் அநுஷ்டாநங்களும் நன்கு அறிந்ததே. நம்மால் ஏற்படுத்தப்பட்ட ஸம்ஸ்க்ருதகலாசாலை, ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாபத்ரிகை, ஸ்ரீ மாலோலவித்வத்ஸதஸ் முதலான நம் ஸம்ப்ரதாயாபிவ்ருத்திகரமான கார்யங்களைச் செவ்வனே நடத்திக்கொண்டு அழகியசிங்கர் பல்லாண்டு பல்லாண்டுகளாக எழுந்தருளியிருந்து நம் ஸம்ப்ரதாயத்தை ஸ்தாபித்தருள ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் அநுக்ரஹிக்கவேண்டும்.'

[ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா, ஸம்புடம் 10, ஸஞ்சிகை 12. கரவாண்டு மார்கழித்திங்கள், பக்கம் 382.]

என்று ஆறேழாம்பட்டத்து ஸ்ரீ அழகியசிங்கர் அருளிச்செய்த அருண்மொழிகள் பொன்னே போல் போற்றத்தக்கன. வளர்க கார்த்திகைப் பூராடத்தான் சீர்த்தி. வாழ்க அழகியசிங்கர். வாழ்க உலகெலாம்.

ஸ்ரீ:

நற்போதுபோக்கு

ஸ்ரீமதழகியசிங்கர் மதுரைக்கு எழுந்தருளினார். ஸ்ரீ அஹோபிலமடம் விஜயம் ஏற்பட்டது. துணைக்கு ஆள் இல்லை. ஸேவிக்கப் போக முடியவில்லை. பெருமாள் வீதியில் 2-7-54 இரவு பட்டணப்ரவேச திருவிழா கண்டருளுவதாகச் சொன்னார்கள். பூர்ணகும்பம், கர்ப்பூரமங்களஆலத்தி அடியேன்குடிசை முன் ஸமர்ப்பிக்க ஏற்பாடாயிற்று. எம்பெருமான் ரூபியாயும் அரூபியாயும் பக்தர்களுக்கு உபகரிக்கிறான் என்பது உண்மையே. அந்தர்யாமியாயுள்ள ஸர்வேச்வரன் என்னை இழுத்துக்கொண்டு போனான். வீதியில் கூட்டத்தை எதிர்த்து ஆள் நுழைய முடியாது. கூட்ஸ் ஷெட் தெருவுக்குப் போனேன். அங்கு ஓர் பாகவதர் தேசிகதர்சனதொண்டர் கையைப் பிடித்து ஓர் திருமாளிகைக்கு அழைத்துப் போய் உள்ளே போகும்படி கட்டளையிட்டார். அவ்விதமே சென்றேன். அங்கு ஒரு ஸ்வாமி கருணையோடு வரவேற்றார். ஸ்ரீ அழகியசிங்கரையும் பெருமாளையும் ஸேவித்தேன். மந்த்ராக்ஷதை பெற்று தன்யனானேன். பிறகு அந்த தொண்டரும் மற்றொரு தொண்டரும் அடியேனை கைத்தாங்கலாகக் கொண்டு அடியேனுடைய குடிசையில் சேர்த்தார்கள்.

பிறகு ஊர்வலம் நெருங்கியது. என்னுடைய ஆயுளில் கண்டது தேசத்தலைவர்களின் வரவேற்புக் கூட்டங்களே மிகப்பெரிதானவை. 'ஓம் ஒழிக' என்கிற கூவுதலுக்கு ஓய்வு ஏற்படவும் பெரும் கூட்டம் கிளம்பியது. ஐயன்மீர்! இன்னும் அச்காக்ஷி, எப்படி திருப்பாவை ஜீயர் என்று பட்டம் பெற்ற ஸ்ரீராமாநுஜர் தம்முடைய கோஷ்டியோடு ஸ்ரீரங்கத்தில் ரத்நங்கள் இழைத்த வீதியில் திருப்பாவை ஸேவித்துக்கொண்டு எழுந்தருளும்போது ஆணும் பெண்ணும் ஸாஷ்டாங்கமாய் தெண்டன் ஸமர்ப்பிக்க அவர்களுடைய சரீரத்தில் குடிகொண்டிருந்த துர்தேவதைகள், பிசாசுகள், கோரய்தேவதைகள் எல்லாம் அங்கு இனி வஸிக்க இடமில்லையென்று தட்டுகளாகப் பரந்து ஓடுவதை கண்ணால் (ஜ்ஞானக்கண்ணால்) காண்கிறோமோ, அதுபோன்ற காக்ஷியை அன்று ப்ரத்யக்ஷமாகக் கண்டேன். 'ஓம் ஒழிக' என்கிற சொல் மடிந்தே போயிற்று. ஓடினவிடம் தெரியாமல் போய்விட்டது.

அடியேன் குடிசைக்கு ஸமீபம் ஸ்வாமி எழுந்தருளவும் ஸூரியநாராயணனோ, அவனுடைய பிரபையும் கூடவோ, ஸ்ரீ ராமாநுஜரோ தண்டும் பவித்ரஸஹிதமாகவோ எழுந்தருளுவதென்று திகைத்து, உடம்பு மயிர்க்கூச்சல் எடுத்து, மதியிழந்து பரவசமானேன். பூர்ணகும்பம் ஸமர்ப்பித்தேன். அடியேனது மூத்த நாட்டுப்பெண் கற்பூரமங்களஹாரத்தி ஸமர்ப்பித்தாள்.

எம்பெருமான் ஸங்கல்பத்தால் ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞையானது ஓங்கி வளர்ந்து ஒவ்வொருவருடைய மனத்திலும் தாக்கி, தர்மம் தழைக்கும் தழைக்கச்செய்யும், என்பதையே இந்த ஆசார்யஸ்வாமிகளின் ஊர்வல உத்ஸவம் ஸ்தாபிக்கிறது. இதில் நம்பிக்கை கொள்ளச் சொன்னேன்.

மேலும் உகாரத்தின் மேன்மையால் தான் அகாரத்தின் ஸர்வசுதந்தரத்தையும், மகார வர்க்கத்தார் அறியமுடியுமென்பதையும் நன்கு ஸ்தாபித்தது. ஊர்வலமஹிமையை இம்மட்டில் அறிந்தேன்; த்யாநம் பண்ணினேன்; இக்காக்ஷியை மறவேன்; ஆநந்தகோசத்தில் மூழ்கினேன். விடிந்தது. காலையில் மார்வாடிகள் சத்திரத்துக்கு விடைகொண்டேன். அங்கு திருவாராதனம் முடியும் ஸமயம். இராமநாதபுரம் ஜில்லா ஜட்ஜ் நமது வைதிககுழாங்களுக்குத் தலைவர், அடியேனை அநுமதித்தார்.

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் ஸ்ரீமதழகியசிங்கர் நின்ற காக்ஷி நரநாராயணஸ்வரூபமே. பிறகு அழகியசிங்கர் ப்ரதக்ஷிணம் பண்ணி அர்ச்சாவதாரபெருமாளை ஸேவித்த அழகே அழகு. என் சொல்வேன்! ஆழ்வாருக்கும் பொன்னாசை விடவில்லை என்பர். எம்பெருமானுடைய பாதங்கள்ஸ்வர்ணமயமாயிருப்பதைப் பார்த்தால் அந்தஅழகில் ஈடுபட்டு ஆழ்வார் மயங்கி அதை அநுபவித்தார். ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்வர்ணமயம்; உச்சி முதல் உள்ளங்கால் வரையில் ஸூர்யப்பிரபை

போல் சுற்றிலும் ஸ்வர்ணப்ரகாசம். இங்கும் ஓர் அற்புதக் காக்ஷி. ஸ்ரீ ராமன் விச்வாமித்ர ரிஷியோடு ஜனகமஹாராஜன் ஸபையில் பிரவேசிக்கவும் ஸ்ரீ ராமனுடைய திவ்ய அழகில் ஈடுபடாதார் உண்டோ? அழகைக் காண ஆயிரம் கண்கள் வேண்டுமென்றும் வர்ணித்தார்களே! அதுபோல ப்ரதக்ஷிணம் பண்ணுவதற்குமுன் நின்றதைக் கண்ட காக்ஷி இருந்தது.

ஸ்ரீ ராமன் சித்ரகூடபர்வதத்திற்கு விஜயமாகவும் அங்கிருக்கும் ரிஷிகள் ஸ்ரீ ராமனது அழகில் ஈடுபட்டு ஸ்வாமியை ஆலிங்கனம் பண்ணிக்கொள்ள ஆசைப்பட்டதாகப் புராணம் போதிக்கிறது. அது போல் இரண்டாவது ஸேவை. ஜீவாத்மஸ்வரூபம், அதன் இயற்கை தானுகவே வெளியாகிறது. ஆசார்யன் ஸர்வ ஸ்வதந்த்ரன். கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா இந்த ஸ்வரூபமல்லவோ, அடி பணிந்து ஆட்கொள்ளவேணுமென்று பிரார்த்திப்பது. நமது (மகார அதிகாரிகளுக்குள்ள) பணி என்பது அநுபவஸித்தமாயிற்று.

ஓர் நண்பர் அடியேனை கோஷ்டியில் வீற்றிருக்கச் செய்தார். ஸ்ரீ அழகியசிங்கர் முன் உட்கார்ந்திருந்தேன். வேதபாராயணம் நடந்தது. வேதபுருஷனும் சேர்ந்து அநுபவிப்பதுபோல் அழகியசிங்கரும் பாராயணம் பண்ணியாயிற்று. ஒரு யோக்யதையுமில்லாமல் கல்போல் இருந்தேன். வைதிககோஷ்டியில் முன்னால் உட்கார்ந்தது எவ்வளவு ஏற்கும்? யாவரும் கருணை காட்டியதால் நடந்தது. விசியோகப்ரஸாதங்களும் ஸாதிக்கப்பட்டு கோஷ்டி கலைந்தது.

மேலும் ஓர் ரஹஸ்யம். ஸ்ரீ அழகியசிங்கரின் மூன்று நிலைகள் சொல்லப்பட்டன. முதலில் ஸந்நிதியில் அழகியசிங்கர் நின்றது- பெரிய திருமந்த்ரம். அதாவது- திருப்பல்லாண்டு முதல் பாசுரம். த்ரிதண்டத்தோடு ப்ரதக்ஷிணம் பண்ணி நின்ற நிலை- த்வயம். திருப்பல்லாண்டு 2-ம் பாட்டாகும். பிறகு வேதபாராயணம் பண்ணும் நிலை 'ஸர்வதர்மான் பரித்யஜ்ய—' என்கிற சரமச்லோகநிலை. சூழ்ந்திருந்தேத்துவர் என்கிற 12-ம் பாசுரமாகும். மணிமாமண்டபம் ஸேவையல்லவோ இருள்தரு மாஞாலத்தில் காக்ஷி கண்டது. இல் லீலாவிபூதியை நித்யவிபூதியாக போரக்கடவீர் என்கிற ஆஜ்ஞைஉண்மையாகஏற்பட்டதே. ஸ்ரீ அழகியசிங்கரை ஸேவித்திருந்த காலம் மோக்ஷாநந்தமல்லவோ? ஸ்ரீ அழகியசிங்கரது விஜயத்தால் நாடு நன்கு வைதிகமாக நடக்குமென்பது திண்ணம்.

குறிப்பு:- [இந்த அநுபவத்தைக் குறித்து கீழ் குறிப்பிட்டுள்ள ஸ்வாமிகள் அபிநந்தனத்தைத் தெரிவித்துள்ளார்கள். அவகாசக்குறைவினால் அவை முழுமையும் அச்சிட முடியவில்லை.

ஸ்ரீ. உப. தார்மிகரத்னப்ரதீபம், N.R. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார், B.A.,B.L.
,, S. ராமஸ்வாமி அய்யங்கார், B.A. B.L.
,, R. நரஸிம்ஹாசாரியார், M.A. லெக்சரர், மதுரை காலேஜ்.
,, T. நோதாத்ரி அய்யங்கார், M.A. ப்ரின்ஸ்பால், மதுரை காலேஜ்.
,, K. ஸ்ரீநிவாஸன், M.A. ப்ரின்ஸ்பால், T.N.P. காலேஜ்.
ஸ்ரீ. P.R. சக்ரவர்த்தி, டிஸ்டிரிக்ட் ஜட்ஜ், (ராமநாதபுரம்) மதுரை.

இன்னும் அநேக பெரியோர்களும் இவ்வநுபவத்தைக் கேட்டும் கண்டும் ஆநந்தித்திருக்கிறார்கள்.)

ஸ்ரீ:

ஸ்ரீ அஹோபிலமடம் 43-வது பட்டம்

ஸ்ரீ வீரராகவஸடகோப யதீந்த்ர மஹாதேசிகன் மீது இயற்றிய

வாழ்த்துப் பதிகம்

அறுசீர்

1 பேர்படைத்த ஐயவாண்டு ஆனித்திங்கள்
பெருகுநிலா மதிக்காலம் முதலாக்கொண்டு
சீர்படைத்த தென்னாடின் திலதமென்ன
செழுந்துவரைப் பதிமேவும் செம்பொற்பாதம்
பார்படைத்த பரமனவ தாரந்தன்னுள்
பாவுபுகழ் ஈரிரண்டாம் எண்சேர்ஞானப்
பேர்படைத்த பெருமானே! தமியேமுய்யப்
புவியின்மிசைத் தலைக்கணியாய்ப் புனைவோம் யாமே.

வேறு

2 வேதவேதனென நாதர்நாதனென வெஞ்சினத்த அரிவேடமாய்
சாதல்தன்னையெதிர் கண்டவாணிருதன் சாய்வுறத் தலைதுணித்துமே
வேதவேதியர் விரிஞ்சினாதியர் விரித்துரைத்திலகு மேவுசீர்ப்
போதமென்னவமர் சீதவண்துவரை பொங்குசிங்கமுது குன்றமோ?

3 தத்திவாளமர்செய் மத்தவாணிருதன் தலைகள் பத்துமோர் கணத்திடை
பத்திபத்தியென வித்திவித்தியிடல் கண்டு பற்பலரும் எங்ஙனே
நத்திநத்தி நின தாள்பணிந்துநிதம் நல்லவாழ்வுபெற வெண்ணியே
சித்தமொத்துறையும் சீதவண்துவரை சீர்பொலிந்த வள்ளூர்கொலோ?

4 பிணியரங்கவினை சென்றுசென்றகலப் பின்னுகின்ற பெருங்காலமும்
மணியரங்கமுடி கொண்டுமேவியமர் மன்னுகொண்டலென வானவர்
பணியரங்கநகர் பாம்பணைத்துயில்கொள் பரமன்மேவுமிட மென்னவே
அணிகொள்சோலை புடைசூழ்ந்துயர்ந்ததெம் துவரை! அம்மஇதுஎன்கொலாம்!!

5 பன்னுமாமறை பயின்றுமங்கையருள் பொங்கியெங்குநிறை நாதனே!
மன்னுமெம்மருது நண்ணிநின்றனை, இரண்டுதிங்களிடை யென்னவே
நின்னமாவிரத நாலுமாதநிறை நின்றதெங்ஙனெனின் நீடுலாம்
தென்னநாடுபெறு பாக்கியத்துணையிங் கெந்தநாடுபெற் றுய்ந்ததே!

வேறு

6 தண்துவரைப் பதிவந்து தண்ணருள்செய் கின்றானும்
வண்சடகோ பப்பெயரோன் வாழ்வளித்த வாழ்விதுவால்;



மதுரையில் ஸ்ரீ அழகியசிங்கரின் பட்டணப்ரவேசம்

திண்ணியமா மறைப்பொருளைத் தெளிவிக்கும் தேசிகனார்
நண்ணியெமக் கருள்செய்த நாமுரைக்க வல்லையோ?

7 அருமறையின் பொருளேயோ? ஆயனார்செல்விபோலி
திருவுரையின் தெளிவேயோ? தேசிகா! திகழ்த்தரிய
தருவெனலாம் நம்மாறன் தருபொருளை ஆய்ந்துரைக்கும்
உருவேயோ! உத்தமனார் உகந்தளித்த உட்பொருளே!

8 பரமனவ தாரங்கள் பத்தென்று பன்னுவரால்
விரிவுரைத்த தேசிகரின் விரிவுதொகை யெண்ணிலவாம்
கரையிறந்த காலத்தே காரனுறையு மேனியராய்
இருந்துலகர் வானேற இன்னருள்செய் தேகினரால்.

9 மன்னுமா பாதகங்கள் மலிகின்ற விக்காலம்
தென்னிலங்கைப் பதிசெற்ற தேவாதி தேவனென
இன்றுலகு மூடிநின்ற இருள்கடிவான் இரவியெனத்
தென்னாடு போந்திலகு தேசிகனார் திருவருளே!

10 வாழியவே தென்னரங்கம்! வாழிய வெம் வளநாடு!!
வாழியவெம் மாழ்வார்கள்! வாழியவே சற்குரவர்!!
வாழியவே நான்மறையின் வாழ்த்தெடுத்த அந்தணரும்!
வாழிய வெம் மாரியனார் வண்சடகோ பாதிபனே!!!

டி. திருவேங்கடத்தான்,
காரியதரிசி, கம்பர் கழகம், மதுரை.

ஜய ஆண்டு ஆவணி 23-உ

ஸ்ரீ:

ஆசார்ய மஹிமை

ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை ஆஸேது ஹிமாசல பர்யந்தமாக மன்னிலும் கண்டாந்தரங்களிலும் புகழும்படியாய் ஸ்தாபித்தருளியவர் ஸ்ரீசேஷாம்சபூதராய் அவதரித்த ஸ்ரீபகவத்ராமாநுஜன். நமது ஆசார்யர்களைப் பற்றி ‘ஸ்ரீமந்நாராயணாப்தேஸ் ஸலிலமிவ ஜலம் ப்ராப்ய காருண்யநீரம் நாதாத்ரௌ வர்ஷித்வா தது ரகுவரமிச்ரோரு நிர்ஜராப்யாம் ஸம்ப்ராப்யாம் யாமுநார்யம் ஸரிதமத யதீந்த்ராப்த பூர்ண தடாகம் ஸம்ப்ராப்ய ப்ராணிஸஸ்ய ப்ரவஹதி மிதரா நேதிகேநைவ குல்யை:’ [சடரிபுவாகிற மேகமானது ஸ்ரீமந்நாராயணனாகிற ஸமுத்திரத்திலிருந்து அவனுடைய தயையாகிற ஜலத்தையெடுத்து நாதமுனிகளாகிற ஓர் பர்வதத்தில் விட, அந்த பர்வதத்திலிருந்து அந்த ஜலமானது ஸ்ரீராமமிச்ரர் புண்டரீகாக்ஷரென்கிற மலேச்சுனைகளாகவந்து யாமுநாசார்யரென்கிற நதியில் விழ, அந்நதியானது ஸ்ரீராமாநுஜரென்கிற பெரிய தடாகத்தை ஸம்பூரித்தது. பிறகு அந்த ஜலமானது ஜீவாத்மாக்களாகிற பயிர்களுக்கு எழுபத்திநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளாகிற மடுவுகள் வழியாகப்பாய்ந்து அந்த பயிர்களைக் காப்பாற்றுகிறது] என்று சொல்லப்பட்டிருக்கிறது. எக்கல்பத்திலும் வடியாததான புஷ்கரணியாகப் பூர்வர்களால் கொண்டாடப்பட்ட நம்மிராமாநுஜன் உகந்ததும், அவரால் ஸமர்ப்பிக்கப்பட்ட ஒருநாயகத் திருவாய்மொழி ப்ரதிபாத்யனை திருநாராயணன் உகந்ததுமான தக்ஷிணபதரீ என்று சொல்லப்படுகிற திருநாராயணபுரத்தில் ஸ்ரீரங்கராஜருடைய திவ்யாஜ்ஞையாலே லப்த ஸாம்ராஜ்யலாஞ்சநராய், த்ராமிடாம்நாய தேசிகன் என்கிற பிருதைப் பெற்ற ஸ்ரீகிடாம்பி கேசவாசார்யருக்கு கல்யப்தத்தில் 4480 க்கு மேல் ஸித்தார்த்தி வருஷம் புரட்டாசி மாதம் சுக்ல பஞ்சமி வியாழக்கிழமை கூடிய ஜ்யேஷ்டா நக்ஷத்ரத்தில் தநுர்லக்நத்தில் ஓர் குமாரர் அவதரித்தார். இவருடைய பிதா இவருக்கு ஸ்ரீநிவாஸாசார்யர் என்கிற திருநாமம் சாற்றினர். ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் ஸ்ரீதிருவேங்கடமுடையானின் கண்டாம்சமாய் அவதரித்தார். இவர் அவருடைய நியமனத்தால் அவதரித்தாரென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இவர் கர்ப்பாஷ்டமத்தில் உபநயநாதி ஸம்ஸ்காரங்களைத் தம் பிதாவான கேசவாசார்யர்மூலம் பெற்று பஞ்சஸம்ஸ்காரம் திருவாய்மொழிமுதலானவற்றையும் பிதாவினிடத்திலேயே அதிகரித்தார். பிறகு நடாதூரம்மாளுக்குப் பேரனாகிய கடிகாசதம் அம்மாள் என்கிற மஹானிடம் ஸ்ரீபாஷ்யம், ரஹஸ்யத்ரயம் முதலானவற்றை யதிகரித்து அதிதேஜஸ்வியாய் வித்வத்ஜநாக்ரேஸரராய் எழுந்தருளியிருந்தார்.

பின்பொரு நாள் இவருடைய ஸ்வப்நத்தில் ஸ்ரீஅஹோபிலகுஹாவாஸியான ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் எழுந்தருளி இவரை அஹோபிலமேற எழுந்தருளும்படி நியமித்தருளினன். பிறகு இவர் எழுந்தருளினவாறே அவ்விடத்தில் ‘குஹாவாஸி ஸ்ரீந்ருஸிம்ஹ: ப்ரேஷிதோ(?)’ என்கிறபடி யோகிரூபியாய் ஸ்ரீந்ருஸிம்ஹன் தோன்றி இவருக்கு ப்ரேஷமந்த்ரத்தை யுபதேசித்துச்சென்றார். பிறகு நவந்ருஸிம்ஹர்களில் ஸ்ரீமாலோலன் இவருடைய ஆராத்யரானார். ஸ்ரீமாலோலனின் நியமனப்படி நகரங்களிலும், க்ராமங்களிலும் அவனே எழுந்தருளப்பண்ணிக்கொண்டுசென்று ஆச்ரிதர்களுக்கு பஞ்சஸம்ஸ்கார: பரந்யாஸம் முதலியனவைகளைச் செய்து ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயத்தை ப்ரவசனம் பண்ணிக்கொண்டு எழுபத்திநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளுக்கும் அத்யக்ஷராய் எழுந்தருளியிருந்தார். இவருடைய வைபவத்தை ‘கருடகிரிதுர்யவைபவம்’ ‘ஸத்ஸம்ப்ரதாயமுக்தாவளீ’ என்னும் க்ரந்தங்களில் விசதமாகத் தெரிந்துகொள்ளவும். இங்கு முக்யமானவைகளை மட்டும் விஜ்ஞாபிக்கிறேன்.

'க்வசித் க்வசித் மஹாபா₄கா₃:' என்று சொல்லப்பட்டவை இவருக்கே தகும். இதில் 'கலௌ க்வசித் க்வசித் ஸம்ப₄வ:' என்று ஆபஸ்தம்பர் சொன்ன ஸமுச்சயம் இங்கேயே கவனிக்கத்தக்கது. இவருடைய ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்யாதிகளைக் கண்டு கர்ணாடகஸிம்ஹாஸந சக்ரவர்த்தியான முகுந்ததேவராயன் இவர் திருவடியில் ஆச்ரயித்து இவர் பல்லக்கைத் தானே சுமந்தான். உதயபாநுமிச்ரனென்கிற மஹானை பண்டித வாக்யார்த்தத்தில்ஜயித்தார்.

ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் இவருக்கு சடகோப ஜீயர் என்கிற திருநாமத்தைச் சாற்றினர். பிறகு ஆதிப்பிரானால் கொடுக்கப்பட்ட 'வண்' என்பதோடும், 'ஆழ்வாரால்' அளிக்கப்பட்ட 'ஆதி' என்கிற பிருதுகளோடும் சேர்ந்து 'ஆதி வண்சடகோபஜீயர்' என்கிறதிருநாமம் வழங்கி வருகிறது.

நம்மாழ்வார் இவருக்கு ஹம்ஸ முத்ரையையும் த்ரேதாயுகத்தில் வஸிஷ்டரால் ஸ்ரீராமனுக்கு பஞ்சஸம்ஸ்காரம் பண்ணப்பட்ட ஸுதர்சநபாஞ்சஜன்யங்களையும் தம்மிடம் குரு பரம்பராமூலமாக வந்தவற்றை கொடுத்தருளினர். நம்மாழ்வார் ஸ்ரீமத்வேதமார்க்கசேத்யாதி பிருதுகளை அளித்தார். ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன் 'ஜநிதா ஸ்ரீதா தேவாதஸ்மிந் கலௌ விதஸம்ப்ரதி:' [பகவதிச்சையால் ஓர் மஹான் ஸம்ஸாரருசியற்று இந்த ஸம்ப்ரதாயத்தைத்தழைக்கும்படிசெய்ய அவதரிக்கப்போகிறார்] என்று இவரைப்பற்றி ஸ்ரீமத்ரஹஸ்த்ரய ஸாரத்தில் அறுதியிட்டார்.

இம்மஹான் ஸ்ரீரங்கத்தில் வெள்ளைகோபுரத்தையும், திருமலைக்குப் படிகளையும், பெருமாள்கோயிலில் நூற்றுக்கால் மண்டபத்தையும் கட்டிவைத்தார். மேலும் பலவிடங்களில் நம்மாழ்வார், பாஷ்யகாரர், தேசிகன் முதலியவர்களை ப்ரதிஷ்டை செய்திருக்கிறார். தசாவதாரன் ஸன்னிதியில் திருமங்கைமன்னனை ப்ரதிஷ்டை செய்துவைத்தார். ஸ்ரீரங்கத்தில் நாச்சியார் ஸன்னிதிக்கெதிரில் ஸ்ரீதேசிகன் ஸன்னிதி கட்டி ஸ்ரீதேசிகனை ப்ரதிஷ்டை செய்து தாமே ஆராதித்துவந்தார்.

ஸ்ரீஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் அஹோபிலத்தில் பவநாசிநீக்கரையில் சில காலம் யோகநிஷ்டராயெழுந்தருளியிருந்தார். ஆந்த்ரதேசியனான க்ருஷ்ணதேவராயனுடைய மந்த்ரிகளில்- அஷ்டதிக்கஜங்களில் ஒருவரான அலஸானி பெத்தண்ணா என்றவன் தன்னுடைய க்ரந்தங்களில் இம்மஹானை ஸ்தோத்ரம் செய்திருக்கிறான். அவன் இவருடைய சிஷ்யனுமானான். அரசனான க்ருஷ்ணதேவராயனும் 'ஆமுக்தமால்யதா' என்கிற க்ரந்தத்தில் (தெலுங்குபாஷையிலுள்ளது) மஹாதேசிகனை மிகவும் புகழ்ந்திருக்கிறான். அக்காலத்தில் 'யதா² யதா² ராஜாநஸ்தே²யோ²வ ப்ரஜா:' என்கிறபடி பகவானை எப்படி ஆராதிப்பார்களோ அவ்விதம் இம்மஹானையுமாராதித்துவந்தார்கள். 'தே³வாநுக்³ரஹபாத்ரத்வம் ஶிஷ்யாநுக்³ரஹ காரணம்। காருண்யமேவ வித்³யாத் ஶ்ரேஷ்டதேஶிகலக்ஷணம்॥' [பகவானுடைய அநுக்ரஹத்தைப்பெறுவதும், சிஷ்யர்களை அநுக்ரஹிப்பதும், கருணைபூண்டிருப்பதும் தேசிகலக்ஷணம்] என்கிற தேசிகலக்ஷணம் இம்மஹானிடம் குடிகொண்டிருந்தது. 'ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்' என்று கீதாசார்யன் சொன்ன ஜ்ஞாநி இவரென்பதில் ஸந்தேஹமில்லை. இவர் உண்ணும்சோறும் பருகுநீரும் எல்லாம் கண்ணனென்றிருந்தார். 'கர்மாவித்யாதிசக்ரே' என்கிறபடி ஸம்ஸாரத்தில் அகப்பட்டு அடிபட்டு அலைகின்ற ஜீவராசிகளுக்கு இவரே தஞ்சமாகவிருக்கிறார். இம்மஹானுடைய தனியனில் 'ப்ரபத்³யே நிரவத்³யாநாம் நிதி⁴ம் ஸத்³கு³ணஸம்பதா³ம்' [தோஷமற்றகுணமாகிற ஸம்பத்துக்களுக்கு கடைபோன்றவர்] என்றமைந்திருப்பது இவருக்கே தகுமென்று பூர்வாசார்யர்கள் உத்கோஷித்தார்கள். 600 வருஷங்களுக்கு முன் இம்மஹானவதரித்து ஸ்ரீராமாநுஜ ஸம்ப்ரதாயத்தை ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனுகக்கும்படி லோகமெங்கும் ப்ரவாஹம்செய்து, பின்பும் 43 பட்டம் ஸ்ரீஅழகியசிங்கர்கள்மூலமும் தழைக்கும்படிசெய்து மோக்ஷாந்தமான ஐச்வர்யத்தை நமக்குத்தந்துபகரிக்கும் இம்மஹானை வாயார வாழ்த்துவதே நமது கடமை.

ஸ்ரீ:

திவ்ய ப்ரபந்தங்களில் ஒரு பாடல்

வேதநூற்பிராயம் நூறு மனிசர்தாம்புகுவரேனும்
பாதியுமுறங்கிப்போகும் நின்றதிற்பதினையாண்டு
பேதைபாலகனதாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலாற்பிறவிவேண்டே னரங்கமாநகருளானே!

(இ—ள்) மனிசர்- மனிதஜன்ம மெடுக்கும் ஆத்மாக்கள், வேத நூல்— வேதஶாஸ்த்ரங்கள், நூறு பிராயம் தாம்— நூறு வயதுண்டென்று குறிப்பிட்டுச் சொல்லும் சரீரத்திலே தாம், புகுவரேனும்- நுழைந்து பிறப்பார்களானாலும் பாதியும்- அதில் ஒரு பகுதியும், உறங்கி- தூக்கத்தையுள்ளதாய், போகும்— கழியும்; நின்றதில்— விழித்திருக்கும் காலத்தில், பேதை— பேதைமுதலான பர்வங்களும், பாலகன் — பாலன்முதலான ப்ர்வங்களும், பதினையாண்டு- பதினைந்து வருஷங்கள், (மற்றவை) அது- காமம், பிணி— வ்யாதி, பசி— வேட்கை, மூப்பு- செயலற்ற உயிர்வாழ்க்கை, துன்பம்— துயரமும் அவஸ்தையும், ஆகும்— (இவைகளின்) உருவமும் பயனுமுடையதாயிருக்கும். ஆதலால்— (பிறப்பின் பயன் வாழ்க்கையில் இவ்விதமாதல் பற்றி) பிறவி- ஜன்மத்தை, வேண்டேன் — விரும்பவில்லை. அரங்கம் — பொதுஸ்தலம், ஆ— ஆகிற, நகர்- திவ்யக்ஷேத்ரத்தில், உளானே— நித்யவாஸம் செய்பவனே!

(கருத்து) மனிதஜன்மமெடுக்கும் ஆத்மா வேதஶாஸ்த்ரங்கள் நூறு பிராயம் உயிருடனிருக்கத் தக்கதென்று குறிப்பிட்டிருக்கிறமனிதசரீரத்தில் புகுந்து பிறக்கிறது என்பதுமுடிந்தபொருள். மனித வயதுக்கே பிராயமென்று சொல்வது மனிசர் என்ற பலர்பால் பெண்ணையும் ஆணையும் ஒருசேரக் குறிப்பது. தாம் என்பது மனிதசரீரத்தைக் குறிக்குமாறு மனிசர்தாம் புகுவரேனும் என்றும் அந்வயம். மனிதசரீரம் நூறு வயது வாழ்ந்திருக்கத்தக்கதென்றும் ச்ருதி ஸ்ம்ருதி வைத்யஶாஸ்த்ர வாக்யங்கள் மிகப்பல பாதியென்றது அவரவர் பழக்கத்துக்கும் ஸௌகர்யத்துக்கும் ஏற்றவாறமையும் பகுதியை இது நூறு வயதின் பகுதியல்ல, ஒவ்வொரு தினத்திலும் அவரவர் தூங்கும் பகுதி போகுமென்றது. மனஸ்புத்தி சரீரங்களின் இஷ்டவ்யாபாரங்களுக்குதவாது கழியும் காலத்தை மட்டும் குறித்தது. பாடலின் பராகாஷ்டை காலத்திலாதலால் மனிதசரீரத்துக்கு யுக்தமான தூக்கத்தால் வரும் பெரும் பயன்களை நிஷேதித்தபடியல்ல. ஆதலின் செல்லுமென்னும் பொருளில் போகுமென்றார். நின்றதில் என்றது அந்த நூறு பிராயத்தில் விழித்திருக்கும் காலங்களை. அதில் பதினைந்து வருஷம், பேதை என்பது. பெண்களின் பருவத்தொடக்கம் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அறிவை, தெரிவை, பேரிளம், பெண் என்னும் ஏழு பர்வங்களில் மடந்தைப்பருவம் முடியும் பதினைந்து வயதைப் பெண்களுக்கும், பாலன், மீளி, அறிவோன், திறலோன், காளை, விடலை, முதுமகன் என்னும் ஆண்களின் ஏழு பர்வங்களில திறலோன் என்னும் நான்காவது பர்வம் முடியும் பதினைந்து வயதையும் குறிப்பிட்டு இவை தன்னினைவில்லாமல் விளையாட்டாய்க் கழிகிற வயதாதலின் இந்தப் பதினைந்து ஆண்டுகள் தன்னுணர்ச்சியின்றிப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் கழிகின்றன என்றார். மீதமுள்ள எண்பத்தைந்து ஆண்டுகளுக்கு ப்ரயோஜனம் சொல்லப் புகுந்தவர் காமவசப்பட்டுத் திரியும் காலத்தை 'அது' என்று குறித்தார். பிணி பசி மூப்புக்களும் எல்லாத் துன்பங்களும் துயரங்களும், காமத்தினடியாகவே வருவனவாதலின், அதை முதற் காரணமாகத் தொடங்கி அது விரமிக்கும் வயதின் எல்லையையே குறிப்பிடாமலும் பிணி பசி மூப்பென்று மூன்று வகைத் துன்பங்களைக் குறிப்பர். இவை போன்ற அநேகத் துன்பங்களுக்கு அது ஹேதுவாதலின் துன்பமென்னும் பொதுப்பெயரால் முடித்தார். இது இன்பத்துக்கெதிர்த்தட்டாகவுள்ள வுணர்ச்சிச் சொல். காமத்திற்பட்டவருக்கு ஆயுள்முழுதும் இன்பமில்லை; துன்பமேதான் பயனென்பதை வற்புறுத்த வந்தது. இதைத் திருமங்கைமன்னன் பலபடியாக விரித்துரைப்பர். 'கூடினேன் கூடியிளையவர்தம்மோ டவர்தருங் கலவியே கருதி'

'ஆவியே யமுதே யென நினைந்துருகி யவரவர் பணைமுலை துணையா' 'சேமமே வேண்டித் தீவினைபெருக்கித் தெரிவைமாருருவமே மருவி' 'வென்றியே வேண்டி வீழ்பொருட் கிரங்கி வேற்கணார் கலவியே கருதி' 'வாணிலா முறுவல் சிறுநுதற் பெருந்தோள் மாதரார் வனமுலைப் பயனே பேணினேன்' (இந்தப் பயன் தான் பிணி பசி மூப்புத் துன்பம்) 'சிலம்படியுருவிற் கருநெடுங்கண்ணார் திறத்தனாய்' 'மானேய்கண் மடவார் மயக்கிற்பட்டு' முதலான எண்ணிறந்த ப்ரயோகங்களிற் கண்டுகொள்க. சங்க நூலாரும் 'எண்ணமதலானமபண்ணும், இற்பிறப்பிடிய நூறும், மண்ணிய புகழை மாய்க்கும் வரும் பழி வளர்க்கும், மானத்திண்மையையுடைக்கும், ஆண்மை திருவொடு சிதைக்கும், சிந்தை கண்ணோடு கலக்கும் மற்றிக்கடைப்படு காமமென்றார்' என்பராதலின், அதைத் தன் பாட்டில் பெயர்கூடச் சொல்லக்கூடாதென்று 'அது' என்றார். நெருப்பென்று சொன்னாலும் வாய்வேகுமென்னுமாப்போலே பதினைந்து வயதுகள் நன்று தீது நாடிச் செய்யும் திறனின்மையின் உறங்குதலுக்கும் விழித்திருத்தலுக்கும் வாசியின்றிப் போகும் என்றார். பேதை பாலகனாதும், அது (காமம்) பிணி பசி மூப்புத் துன்பமாகும் என்றும் ஆதும் என்னும் சொல்லை இரட்டுற மொழிதலாகக் கொள்ளத் தக்கது.

மனிசர்தாம் புகுவரேனும் என்று சிறப்புப் பெயரால் தொடங்கி, பிறவி வேண்டேனென்னும் பொதுப்பெயரால் முடித்ததைக் கருதின் பிறவிகளிலெல்லாம் மிகவுயர்ந்ததென்று நூல்கள் கூறும் மனிதப்பிறவியே இக்கதியிலிருக்குமானால் இதுவும் வேண்டேன், மற்றைப் பிறவியும் வேண்டேன் என்ற கருத்துப்புலனாகும். அரங்கம் ஆற்றினிடையேயுள்ள இடம், கூத்துப்பயிலிடம், சூதாடுமிடம், நடனஸபை, போர்க்களம் என்னும் இவ்வளவு பொருள்களும் கொள்ளத் தக்கதாதலின் இவையெல்லாம் ஹிரண்யன் வ்யாபாரங்களென்று குறிப்பிட்டுத் தன்னை ரக்ஷிக்க வேணுமென்பது குறிப்பு. பிறவி வேண்டேன் என்னும் எதிர்மறையால் மோக்ஷம் ஒன்றையே வேண்டுகிறேனென்பது குறிக்கப்பெற்றது. உலகத்தை ஆக்கி, அளித்து, மறைத்துக் கூத்தியற்றிச், சூதாடி நன்மைதீமைகளைப் போர்புரியவிட்டு வேடிக்கை பார்க்கும் நீ இவைகளுக்கெல்லாம் ஆஸ்பதமாயிருக்கும் பிறவி எனக்கில்லாமலருளவேண்டுமென்பது விண்ணப்பம்.

அட்டைப்படவிளக்கம்

இந்த ஸஞ்சிகையின் அட்டையில் திருச்சுகனூரில் பத்மாவதியெனப்படும் அலர்மேல்மங்கைத்தாயார் மிக நேர்த்தியான திருக்கோலத்துடன் ஸேவை ஸாதிக்கிறார். தாமரை மலரில் அவதரித்ததால் பத்மாவதி எனவும் தமிழில் அலர்–தாமரை-அதன்மேல் அவதரித்ததால் அலர்மேல்மங்கையென்றும்சொல்லப்படுகிறது. இத்தாயார் ஒர்கார்த்திகை மாதத்திய சுக்ல பஞ்சமிஉத்திராடநக்ஷத்திரத்தில் திருக்குளத்தில்அவதாரம் செய்தருளியதாகப் புராணம் கூறும். அந்த அவதாரதினத்தில் அவப்ருதமாகும்படி முன்னதாக உபக்ரமித்துப் பத்து தினங்கள் ப்ரஹ்மோத்ஸவம் நடைபெறுகிறது. இங்கு சுகமஹர்ஷியின் ஆச்ரமம் இருந்ததாகவும், அதனால் திருச்சுகனூர் என்ற பெயர் மருவி திருச்சானூர் என்றும், தாயாரின் பெயரைக்கொண்டு அலர்மேல்மங்காபுரம் என்றும் ஊருக்குப் பெயர் வந்துள்ளது. இந்த பஞ்சமி தீர்த்தத்தன்று திருமலையிலிருந்து திருவேங்கடமுடையானுக்கு அர்ச்சனை செய்யப்பட்ட திருத்துழாய், புஷ்பம் முதலிய ஸகலமரியாதைகளுடன் அனுப்பப்படுகிறது. இது வருஷத்தில் ஒரே நாள் ஸ்ரீநிவாஸன் தாயாருக்கு அளிக்கும் பரிசாகும். எனவே இந்த உத்ஸவத்திற்கு ஏராளமாக பக்தர்கள் வந்திருந்து ஸேவித்து தந்யராவார்கள். தாயாரின் பிரார்த்தனைக்கிணங்க ஸ்ரீநிவாஸன் தான் திருச்சுகனூர் வந்துசெல்வதுடன், தன்னை வணங்கிவழிபட வரும் பக்தர்களையும் அனுப்பி வணங்கும்படி செய்து வருகிறார் எனப் புராணமறிந்தவர் பணிப்பர். ஸ்ரீநிவாஸனுக்கு பிரார்த்தனைகள் செலுத்துவதுபோல் இங்கும் பிரார்த்தனைகள் செலுத்துவது உண்டு. கல்யாணமாதங்களில் இங்கு நூற்றுக்கணக்கானவர் வந்து தம் குழந்தைகளுக்கு உபநயனவிவாஹங்களைச் செய்விக்கின்றனர்.

[Block kindly Supplied by the Manager. T. T. D. Press, Tirupathi.]

ஸ்ரீ:

விசாகோத்ஸவம்

கங்யாமாதத்தில் பல ஆசார்யர்கள் அவதரித்திருக்கின்றார்கள். அவர்கள் செய்த அதிமாநுஷ்யக்ருத்யங்களை நினைக்கும்போது நமக்கு மயிர் கூச்சல் எடுக்கின்றது. அப்படிப்பட்ட மஹான்களில் ஒருவர் புரட்டாசி விசாகந்தன்னில் அவதரித்து ஸ்ரீ அஹோபிலமடம் 33-வது பட்டத்தை அலங்கரித்த ஸ்ரீவண் ஸடகோப ஸ்ரீஸடகோப யதீந்த்ர மஹாதேசிகனுமாவார். இம்மஹான் பரந்தூர் க்ராமத்தில் அவதரித்தார். இவருக்கு ஸ்ரீ. உப. வித்வான், வங்கிபுரம் வேதாந்தாசார்ய ஸ்வாமி என்று பூர்வாச்ரமத் திருநாமம். 1853 ம் வருஷம் ஸ்ரீஸன்னிதி நிர்வாஹத்தை ஏற்றுக்கொண்டு 26 வருஷகாலம் ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருந்தார். இந்த இருபத்தாறு வருஷங்களிலிம்மஹான் செய்தருளிய கார்யங்களைப் பற்றி பன்னியுரைக்குங்கால் பாரதமாம். இவ்வழகியசிங்கர் காலக்ஷேபம் ஸாதிக்கும் அழகு தனிச்சிறப்புடையது என்று பெரியோர் பணிப்பர். சேர சோழ பாண்டிய ராஜ்யங்களிலும், ஆந்த்ர கர்னாடகதேசங்களிலும் பன்முறை ஸஞ்சாரம் செய்துள்ளார். ஒருஸமயம் காடுகள் நிறைந்த கர்னாடகதேசத்தில் ஒரு காட்டினூடேசென்று கொண்டிருக்கும் போது மாலைப் பொழுதாயிற்று. உடனே ஒரு மலையினடியில் தங்கி ஸ்ரீமாலோலனை அர்ச்சிக்கலானார். அவ்வமயம் பல திருடர்கள் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இவ்விஷயத்தை அந்தரங்கர்கள் ஸ்ரீ அழகியசிங்கரிடம் அந்தரங்கத்தில் விஜ்ஞாபித்தார்கள். உடனே ஸ்ரீ அழகியசிங்கரும் கள்ளர் தலைவனை தம்முடைய ஸமீபம் வருப்படி நியமித்தார். அவனும் அருகில் வந்து நின்றான். பிறகு ஸ்ரீ அழகியசிங்கரவனைப் பார்த்து 'இவ்விடத்திலுள்ள விலையுயர்ந்தவஸ்துக்கள்யாவற்றையுமுன்னிஷ்டப்படி நாமே நேரில் ஒப்புவித்துவிடுகிறோம். ஆனால் இத்திருவாபரணங்களை கடைசியாகக் கண்ணனுக்குச் சாற்றி டோலோத்ஸவம் பண்ணி ஸேவிக்கவேணு மென்று ஆசைப்படுகிறோம். ஆகையால் உத்ஸவம் முடிந்ததும் கொடுத்துவிடுகிறோ'மென்றுஸாதித்தார். கள்ளர் தலைவனும் அதற்கு ஒப்புக்கொண்டு தூரத்தில் விலகி நின்றான். பரிஜநங்'கள் இப்படியுமுண்டோ' என்று பரிதபித்தனர். உத்ஸவம் வெகு விமர்சையாக நடந்தது. மங்கள ஹாரத்தியானதும் ஸ்ரீ அழகியசிங்கர் கண்ணும் கண்ணீருமாக நின்றவண்ணம் கண்ணனை த்யானம் பண்ணிக்கொண்டு சற்றே நின்றார். கள்ளர் கூட்டத்தில் ஒரே கூச்சல். பரிஜனங்களின் பீதி அதிகமாயிற்று. கள்ளர் தலைவனும் மற்றவர்களும் ஓடோடி வந்தனர். ஹா ஹா என்று கதறினர். ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிகளில் விழுந்தனர். கண்களை மூடிக்கொண்டார்கள். எழுந்திருக்கவும் மறுத்தனர். தலைவன் 'எங்களை ரக்ஷிக்கவேணும். நாங்கள் தபஃப்ரபாவமறியாமல் தப்பு செய்ய எண்ணினோம். எங்கள் தப்பைப்பொறுத்துக்கொண்டு ரக்ஷிக்கவேண்டும்' என்று சொல்லித் திருவடிகளில் மறுபடியும்விழுந்தான். ஸ்ரீ அழகியசிங்கர் அவர்களை ரக்ஷிப்பதாகச் சொல்லி பெருமாள் தீர்த்தத்தை அவர்கள் சிரஸ்ஸில் ப்ரோக்ஷித்தார். உடனே அவர்களும் எழுந்துநின்ற பகவத்தீர்த்தப்ரஸாதங்களைப் பெற்றுக்கொண்டு தண்டனிட்டு நின்றார்கள். முக்காலமறிந்த முக்கோல்பிடித்த முனிவர்,மற்றவர்களும் நம்பெருமாள் ப்ரபாவமறிவதற்காக கள்ளர் தலைவனை விளித்து 'இதற்குக்காரணமென்?' என்றார். 'எங்கள் எல்லோரையும் அநேக ஸிம்ஹங்கள் பயமுறுத்தின' என்றான். கண்ணன் (ஆளரி) எங்குமுள்ளவனென்கையால் மாரி மலைமுழைஞ்சில் மன்னிக்கிடந்துறங்கும் சீரிய சிங்கமறிவுற்றுத்தீவிழித்து வேரிமயிர் பொங்க வெப்பாடும் பேர்ந்துதறி மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு ஸடா படல பீஷணனாய் அவர்களுக்குத் தோற்றினான். இவ்விதம் ஸ்ரீமஹாதேசிகனுக்கு உண்டாகியிருக்கும் பகவத்ஸாக்ஷாத்காரத்தின் ஏற்றத்தை என்னென்று பேசுவது! இவ்வாறு பல அரிய கார்யங்களை ஸமயத்திற்குத் தக்கபடி அதி

ஸூக்ஷ்மமாய் செய்தருளியாகுமென்று வைபவம் தெரிந்தோர் சொல்லிக்கேட்டுள்ளோம்.

அம் மஹானின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் திருவுள்ளூரிலிருக்கும் ப்ருந்தாவனத்தில் இரண்டு தினங்களுக்கு முன் வேத ப்ரபந்தபாராயணங்களுடன் உபக்ரமிக்கப்பட்டது. திருநக்ஷத்ரத்தன்று காலையில் ஸ்தோத்ரபாடவேத பாராயண கோஷ்டிகளுடன் வீதிவலம் வந்து கோயிலுக்குள் எழுந்தருளினார். ஸ்ரீராகவனும் கனகவல்லீநாயிகாஸமேதனாய் அபிஷேகமண்டபத்தில் வீற்றிருந்தான். ஸ்ரீ அழகியசிங்கர் கச்சேரிமேட்டிற்கு ஸமீபம் எழுந்தருளியானதும் திரை திறந்து ஸர்வலோகசரண்யனுக்கு கற்பூர ஹாரத்தியாயிற்று. இவர் தாம் தமக்குச்செய்துள்ள கைங்கர்யங்களுக்குப் பரிசாக மாலை பரியட்டம் முதலியவைகளைத் தந்தருளினான் ஸ்ரீராகவன். மறுபடி எம்பெருமானுக்கு மங்களஹாரத்தியானதும் காசையாடைப் பாசுரங்கள், கிங்க்ருஹேசஸ்துதி, ரகுவீரகத்யம், ந்யாஸதசகம், ஸ்ரீஸ்துதி முதலியவைகளனுஸந்திக்கப்பட்டன. பிறகு இங்கு கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான்களையும், ஆழ்வாராசார்யர்களையும் இங்கிருந்தே மங்களாசாஸனம் செய்துவிட்டு ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் ஸன்னிதிக்கெழுந்தருளி மாலை சடாரி முதலியவைகளைப் பெற்றுக்கொண்டு 'கந்யாஜ்யேஷ்டாவதீர்ணாய' முதலியவைகளால் மங்களாசாஸனம் செய்துஸன்னிதிவீதியேற எழுந்தருளி ப்ருந்தாவனத்திற்கெழுந்தருளினார். மத்யாஹ்நம் திருமஞ்சநமானவுடன் கோயிலிலிருந்து கொண்டுவரப்பட்ட அமுதுபடிகளை கண்டருளியான பிறகு திருப்பாவை சாற்றுமுறையானவுடன் வழக்கப்படி ஸ்ரீந்ருஸிம்ஹன் ராகவன் ஆரம்பித்து ஸ்ரீ அழகியசிங்கர் பர்யந்தம் ஸம்பாவனைகள் பண்ணப்பட்டன. மறுபடியும் ராத்ரி லைட் மத்தாப்பு வாண வேடிக்கைகளுடன் புறப்பாடாயிற்று. ப்ருந்தாவனவாயலில் இராமாநுச நூற்றந்தாதி துடங்கி ஸேவித்துக்கொண்டு ஸ்வாமிகள் முன் செல்ல கௌரிகாளை, திருச்சின்னம் நாதஸ்வரங்கள் முதலியன முழங்க, சந்த்ர ஸூர்யர்களோ என்று ப்ரமிக்கப்பண்ணும் ச்வேதச்சத்ரங்களைப் பிடிக்க சாமரங்கள் வீச ஸ்வலங்க்ருதராய் தோளிக்கியானில் ஸ்ரீ அழகியசிங்கர் வீதிகளில் எழுந்தருளினார். பின்னால் ஸ்வாமிகள் வேதபாராயணம் பண்ணிக்கொண்டு வந்தனர். நான்குவீதி புறப்பாடாகி ஸன்னிதி வீதிவழியாக கோயிலுக்குள் எழுந்தருளினார். அங்கு அபிஷேகமண்டபத்தில் தாயாருடன் ஸர்வாலங்காராலங்க்ருதனான ஸரண்யனை காலையில்போல் மங்களாசாஸனம் செய்தருளினார் ஸ்ரீ அழகியசிங்கர். அப்பொழுது இயற்சாற்று ஆனதும் ஸ்ரீஸன்னிதிக்ரமப்படி வாழித்திருநாமங்களும், பெருமாள் துடக்கமாக இதானீந்தன ஸ்ரீ அழகியசிங்கர் தனியன் வரையில் தனியன்களும் அநுஸந்திக்கப்பட்டன. பிறகு ஸ்ரீ ஆதிவண் சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் மங்களாசாஸனமானதும் ப்ருந்தாவனத்திற்கு எழுந்தருளினார். அங்கு வேத பாராயணம் முடிக்கப்பட்டது. ஸ்ரீதேசிகன் ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் இவர்கள் உத்ஸவமானபடியால் அவர்களின் வீதி உத்ஸவமானதும் பெருமாள் தாயார் இவர்களிருவரும், தங்களுடைய ஸௌந்தர்யாதிகுணங்களை ஆசார்யரத்னங்கள் முன்பே அனுபவித்துச் செல்ல தேசிகன் ஸன்னிதி மண்டபத்தில் நவராத்ரி கொலுவில் எழுந்தருளி அங்கு திருவாராதனமானதும் பக்தர் குழாங்களுடன் கண்ணாடி அறைக்கு எழுந்தருளினார்கள். பிறகு மாலைகள், பரியட்டம், திருப்பணியாரங்கள் முதலியன சத்ர சாமர வாத்ய பரிஜனங்களுடன் ப்ருந்தாவனத்திற் கெழுந்தருளப் பண்ணப்பட்டன. பிறகு தளிகை அமுதுசெய்து வேத க்ரந்த ப்ரபந்த சாற்றுமுறைகளுடன் உத்ஸவம் முடிந்தது.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ ஆசார்ய ஜயந்தி மஹோத்ஸவங்கள்

மைஸூர்

மைஸூர் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஜய வருஷ ஐப்பசி மீ திருக்கேட்டை நக்ஷத்ரத்தில் வருஷ உத்ஸவம் 3 நாள் முன்னதாக ஆரம்பித்து திவ்ய ப்ரபந்த, வேதபாராயண, க்ரந்த சதுஷ்டயங்களுடன் 28-10-54 காலை உபக்ரமிக்கப்பட்டு, 30-10-54 காலை சாற்றுமுறையும், சாயங்காலம் வீதிஉத்ஸவமும், ஸ்ரீ ஆதிவண் ஶடகோப யதீந்த்ர மஹா தேசிகனுக்கும், ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகனுக்கும் வீதிப்புறப்பாடுகள் வெகு விமர்சையாக நடந்தன. பிறகு கோஷ்டிவிநியோகங்கள்நடந்தன. ஏராளமான ஸேவார்த்திகளும், சிஷ்யர்களும் வந்து ஸேவித்தார்கள். இத் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை ஸ்ரீ ஆராதகர் சேஷாத்ரி அய்யங்காரும், ஹானரரி ஏஜண்ட் ஸ்ரீ சி. ஆர். அநந்தாசாரியாரும் ஊத்ஸாஹத்துடனும் ச்ரத்தையாகவும் நடத்தினார்கள்.

ந. கிருஷ்ணன்.

திருப்பதி

கீழ்த்திருப்பதியில் வழக்கம்போல் ஐப்பசிமீ 5௳ உபக்ரமிக்கப்பட்டு ஸ்ரீமதாதிவண் ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் வெகு சிறப்பாக நடைபெற்றது. திருக்கேட்டையன்று காலையில் திவ்ய தேசமங்களாஶாஸநம் ஸ்ரீஸந்நிதி ப்ரதக்ஷிணமாக நடைபெற்றது. பிறகு காலை 10 மணிக்கு ஸ்ரீ ந்ருஸிம்ஹதீர்த்தத்திலிருந்து ஸ்ரீ கோவிந்தராஜனின் பரிவாரங்களான யானை, வாத்யம் முதலியவை முன்னும் பின்னுமலங்கரிக்க 20 வெள்ளிக் குடங்களில் திருமஞ்சன தீர்த்தம் வீதிப்ரதக்ஷிணமாக எழுந்தருளப் பண்ணப்பட்டது. பிறகு திரு எவ்வுளூரிலிருந்து ஸ்ரீ எவ்வுள்கிடந்தானுடைய மரியாதை ப்ரஸாதங்களை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்திருந்த அர்ச்சகர், ஸ்ரீ. நரஸிம்ஹாசார்யஸ்வாமியால் ஸ்ரீ ந்ருஸிம்ஹனுக்கும் ஸ்ரீ ஆதிவண் ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகனுக்கும் வெகு விமரிசையாக அலங்காரத் திருமஞ்சனம் நடத்தப்பட்டது. திருப்பாவைச் சாற்றுமுறையில் நூற்றுக்கணக்கான ஆஸ்திக ஸ்ரீவைஷ்ணவர்கள் கலந்து கொண்டு ஆநந்தித்தனர். விசேஷமாகதளிகைகள் கண்டருளப்பண்ணி கோஷ்டி விநியோகம் நடைபெற்றது. இரவு 7 மணிக்கு முன்னும் பின்னும் யானைகள் செல்ல வாத்யங்கள் முழங்க, ஸ்வஸ்திவாசநிகர்களான பல ஸ்ரீவைஷ்ணவர்கள் புடைசூழ, ஸ்ரீ திரு எவ்வுளூர் ஸ்ரீ வீரராகவப்பெருமானின் ப்ரஸாதங்களான சூடிக்களைந்த மாலை, திருப்பரியட்டம் முதலியன தேசிகன் ஸந்நிதியிலிருந்து புறப்பட்டு ஊர்வலமாக அஹோபிலமடத்திற்கெழுந்தருளப் பண்ணப்பட்டன. இரவு 9 மணிக்கு விசேஷ அலங்காரங்களுடன் ஸ்ரீமதாதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வீதி உத்ஸவம் கண்டருளினார். வீதி உத்ஸவம் முடிந்ததும் ஸ்ரீமடத்து வாசலில் ப்ரபந்த சாற்றுமுறையானதும் ஸ்ரீ ஸ்வாமி நேராக ஸ்ரீ கோவிந்தராஜன் ஸந்நிதி கோபுரவாயிலுக்கெழுந்தருளினார். அங்கிருந்து கொண்டு மங்களாஶாஸநப் பாசுரங்களும், இயற்சாற்றுமுறையும், வாழித்திருநாமம்முடிவாக ஸேவிக்கப்பட்டன. பிறகு கற்பூர ஹாரத்தி ஸமர்ப்பிக்கப்பட்டு ஸ்ரீ மடமேற எழுந்தருளினார். பின்னர் ஸேவாகாலமாகி திருவாராதனம் கண்டருளி தளிகை ஸமர்ப்பிக்கப்பட்டது, மங்கள ஹாரத்தியானதும் அருளிப்பாடிட்டு ஸ்ரீ ந்ருஸிம்ஹன், ராகவன் இவர்களது மாலை, திருப்பரியட்டம், அபயஹஸ்தம், பப்ளித்துப்பட்டி, திருத்துழாய் முதலியன ஸமர்ப்பிக்கப்பட்ட பின் வேத ப்ரபந்த சாற்றுமுறைகள் நடந்தன. கோஷ்டிவிநியோகமாகி இம் மஹோத்ஸவம் இனிது முடிந்தது. சில வருஷங்களாக நின்றிருந்த வீதி உத்ஸவம் ஸ்ரீ. உப. வெங்கடக்ருஷ்ணமாசாரியர், பூதேரி, கல்யாணமய்யங்கார், தாமரைப்பூ, வேதாந்தாசாரியர் முதலிய ஸ்வாமிகளின் முயற்சியால் இவ்வருஷம் வெகு சிறப்பாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

சேட்டலூர், வேதாந்ததாஸன்.

மதுராந்தகம்

(ஸ்ரீகல்யாணபிவர்த்திநீ ஸபா)

3-10-54 திருக்கேட்டையன்று காலை 9½ மணிக்கு ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை ப்ரார்த்தநா மண்டபத்தில் ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தையுத்தேசித்து ஸபையானது கலாசாலாத்யக்ஷர் ஸ்ரீ. உ.பா.T. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி (M. A., L. T.) யின் ஆத்யக்ஷத்தில் நடைபெற்றது. அப்பொழுது அத்யக்ஷரும் இதர அத்யாபக ஸ்வாமிகளும் 'ஆசார்ய குண'ங்களை எடுத்து வித்யார்த்திகளுக்குச் சுருக்கமாகவும் மிக அழகாகவும் உபந்யஸித்தனர்.

சொ. ந. வரதராஜன்,
தி. ரா. ஸௌ. ராகவன்,
கார்யதர்சிகள்.

திருவஹீந்திரபுரம்

ஸ்ரீதேசிகன் ப்ரஹ்மோத்ஸவம் 28-9-54 முதல் 7-10-54 வரையில் 10 நாட்கள் வழக்கப்படி விமர்சையாக நடந்தது. காலை இரவு இரண்டுவேளைப் புறப்பாடும், நவராத்ரியாகையால் ஸ்ரீதேவநாதன், ஹேமாம்புஜவல்லித்தாயார் கொலுவில்ல ஸ்ரீதேசிகனுக்கு அருளப்பாடும் பலரும் ஸேவித்து இது விண்ணுலகோ என்று ஆநந்திக்கும்படி நடந்தன. புரட்டாசிக்கேட்டையன்று ஸ்ரீதேசிகன் காலையில் புறப்பாடுகண்டருளியவுடன் ஸ்ரீமதஹோபிலமடத்திற்கு உபயகோஷ்டி கைங்கர்ய பரர்களும் எழுந்தருளி அங்கே அன்றைய நன்னாளில் உபக்ரமித்து நடந்த ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனது திருநக்ஷத்ரவைபவத்தில் கலந்துகொண்டு கைங்கர்யத்திலந்வயித்து மகிழ்ந்தார்கள். உபயவேதாந்தங்கள் முதலான ஸ்ரீஸூக்திகள் ஸேவை சாற்றுமுறையும் கோஷ்டிதீர்த்த விநியோகங்களும் க்ரமப்படி நடந்தன.

புரட்டாசித்திருவோணத்தன்று ஸ்ரீஹயக்ரீவன், ஸ்ரீஅடியவர்க்குமெய்யன், ஸ்ரீசக்ரவர்த்தித்திருமகன், ஸ்ரீஹேமாம்புஜநாயகி ஸ்ரீகோபாலன், ஸ்ரீஸுதர்சனாழ்வான் முதலியவர்கள் ஸந்நிதிகளுக்கு ஸ்ரீதேசிகன் எழுந்தருளி க்ரமப்ரகாரம் மங்களாசாஸநம் நடந்து அதன்பிறகு தீர்த்தவாரியும், இரவு சாற்றுமுறையும் வீதிப்புறப்பாடுகளும் அதிவிமர்சையாக நடந்து ஸேவார்த்திகளை ப்ரக்ருதிமண்டலத்தை மறக்கும்படி செய்தன. ஸ்ரீதேசிகன் முதல் உத்ஸவத்திற்கு முதல் நாளே துடங்கி ஆசார்ய வள்ளலுக்கு ஸேவை ஸாதிக்கவே தானும் தாமரையாளுமாகச்சேர்ந்து ஸேவைஸாதித்துவந்த தேவநாதன் சாற்றுமுறையானதும் அதற்கு அடுத்த நாளும் கூட ஹேமாப்ஜநாயகியுடன் புறப்பாடுகண்டருளி ஆசார்யனுக்கு அருளப்பாடு செய்வித்து மகிழ்ந்தார்கள்.

ஸ்ரீதேசிகன் திருமாளிகையில் 6 வது உத்ஸவத்திலிருந்து 9 வது உத்ஸவம் வரையில் ஸ்ரீ. உப. பா. ராஜகோபாலாசாரியர் (சிரோமணி), ஸ்ரீ. உ.பா. அட்வொகேட் T. S. ராமாநுஜாசாரியர், ஸ்ரீ. உப வித்வான் E. D. ஸ்ரீநிவாஸாசாரியர் முதலிய ஸ்வாமிகள் உபந்யாஸம் செய்தார்கள். அப்போது ஸ்ரீ. உப. வித்வான் N. தேவநாதாசாரியர், ஸ்ரீ. உப. T. S. ராமாநுஜாசாரியர், ஸ்ரீ. உப. அட்வொகேட் C. R. ராஜகோபாலாசாரியர், ஸ்ரீ. உப. R. நாதாசாரியர், B. A., L T. ஆகியோர் உபந்யாஸங்களுக்குத் தலைமை தாங்கினர். ஷை உபந்யாஸங்கள் ஸ்ரீதேசிகஸ்ரீஸூக்திப்ரவசனஸபையின் ஆதரவில் நடந்தன.

ஸ்தலவாஸிகள்.

வடக்குப்பட்டு

இவ்வூர் ஸ்ரீஸுந்தர வரதராஜப் பெருமாள் ஸந்நிதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் உத்ஸவம் புரட்டாசி மீ 8வ ஆரம்பித்து பத்துநாள் வேதப்ரபந்தபாராயணங்களுடன் வீதிப்புறப்பாடு நடந்து 17வ சாற்றுமுறை காலை மங்களாசாஸனத்திற்குப்பிறகு புறப்பாடும், மாலை பெருமாள், ஸ்ரீஸ்வாமி புறப்பாடு நடந்து ராத்ரி வேத ப்ரபந்தசாற்றுமுறையும் விசேஷமாக நடந்தது. இத்துடன் ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன் உத்ஸவமும் ஸ்ரீஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் உத்ஸவத்தின் 5-வது நாள் துடங்கி ஸாயங்காலம் இரண்டுதேசிகர்களுக்கும் 5 நாள் சேர்ந்தாப்போல் வீதி உத்ஸவம் நடந்தது.

பத்தங்கி நரஸிம்ஹ தாஸ:.

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸில்
கீழ்க்கண்ட புஸ்தகங்கள்
விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன

1. அதிகரணஸாராவளி
[தேவநாகரிலிபி சிந்தாமணிவ்யாக்யானத்துடன்
கூடியது] ரூ. 6–8
ஷை காலிகோபைண்ட் செய்தது ... 7–8
2. வீக்ஷாரண்யக்ஷேத்ரமாஹாத்ம்யம் 1–4
3. யஜுஸ்ஸந்த்யாவந்தனபாஷ்யம்
மணிப்ரவாளவ்யாக்யானம் [நாகரி லிபி] 0–12
4. சாற்றுமுறைக்ரமம் 0–12
5. ஸ்ரீவிஶிஷ்டாத்வைதவேதாந்தகோஶ: 20–0
6. காமாஸிகாஷ்டகம் 0–6
7. வைபவஸுதா 1–8
(நாகரிலிபியில் ச்லோகமும் தமிழில் அநுவாதமும்)
8. ஷை ஹிக்தி அநுவாதம் 1–0
9. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் 5–8
(ஸ்ரீ ஸாரபோதிநீவ்யாக்யானத்துடன் கூடியது)
(தபால் செலவு, பாக்கிங்க் சார்ஜ் வேறு)

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் (தொடர்ச்சி)

9.11-54 ல் மருதூரில் ஸ்ரீ கே. வி. ஸ்ரீநிவாஸாசாரியார் வெகு உத்ஸாஹத்துடன் தன்னுடைய எல்லாபந்துக்களையும் வரவழைத்து தன்னுடைய பங்களாவில்எழுந்தருளப்பண்ணி மிகவும் விஶேஷமாக ஆராதித்தார். அன்று ராத்ரி அவருடைய பெரியமாப்பிள்ளை மன்னார்குடி மைனர் ஸ்ரீநிவாஸாச்சாரியார், கண்ணனுக்கு டோலோத்ஸவம் பண்ணிவைத்தார். வீணைகள் நன்றாக வாசிக்கும்படி ஏற்பாடுபண்ணியிருந்தார். ஷெடோலோத்ஸவம் முடிந்ததும் அங்கிருந்து 1மைல் உள்ள தண்ணீர்பள்ளிக்கு எழுந்தருளினார். 10-11.54ல் ஷெயூர் ஸ்ரீநிவாஸாசாரியரும் ராஜகோபாலாசாரியரும் பெருமாளுக்கு திருமஞ்சநம்பண்ணிவைத்து விஶேஷமாக ஆராதித்தார்கள். அங்கிருந்து அன்றுராத்ரி 9மணிக்கு புறப்பட்டு ஒன்றரை மைல் உள்ள குளித்தலைக்கு எழுந்தருளினார். இவ்வூரில் ஸ்ரீ ஸௌம்யநாராயண அய்யங்கார் தேசிகாசாரியர் கிருஷ்ணமாசாரியர் முதலியவர்கள் பூர்ணகும்பத்துடன் வரவேற்று மூன்று நாள் விஶேஷமாக ஆராதித்தார்கள்.

12-11-54 ல் விசேஷமாகக் கட்டணம் கட்டி மண்டபத்திலுள்ள எல்லா பெருமாளுக்கும் திருமஞ்சனம் பண்ணி வைத்தார்கள். மருதூர் ஸ்ரீநிவாஸாசாரியர் இவ்வூருக்கு ப்ரதிதினமும் வந்து புஷ்பங்கள் ஸமர்ப்பித்து மிகவும் பக்திஶ்ரத்தையுடன் பெருமாளை ஸேவித்துவிட்டுப் போனார். 13-11-54 அன்று விசேஷதளிகைகளைப் பெருமாள் கண்டருளும்படி ஸமர்ப்பித்தார். ஸ்ரீ அழகியசிங்கரை தண்டன் ஸமர்ப்பித்து பலமந்த்ராக்ஷதைகளைப் பெற்றுக்கொண்டார். ஸ்ரீ அழகியசிங்கரும் அவரது பக்தியைக்கண்டு உகந்தருளியாயிற்று. இங்கிருந்து கரூர் வழியாகச் சேலத்திற்கெழுந்தருளியாகிறது. (தொடரும்)

போன்: நெ 200 தந்தி: "ஜுவல்லரி"

நவநாகரீகமான தங்க நகைகளுக்கும்

வெள்ளிப் பாத்திரங்களுக்கும்

நம்பிக்கையான இடம்

ஆர். ராமனுதன் செட்டியார்

தங்க நகை வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

40-41. கீழ ஆவணிமூலவீதி, :: மதுரை.

RRC ஸீல் சாமான்கள்

நம்பிக்கையும் உத்திரவாதமுமுள்ளது

ஆர்டரின் பேரில் உடனுக்குடன் செய்துகொடுக்கிறோம்.